

'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.


Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 07 சோபகிருது வருடம், ஆனி மாதம் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை (30.06.2023) ஹிஜ்ரி 1444, துல்ஹஜ் - 11, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## ஜூலை 06 முதல் லொத்தர் சீட்டின் விலை அதிகரிப்பு

தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ஆகியன அதிர்ஷ்டலாபச் சீட்டுகளின் விலையை அதிகரிக்கவுள்ளதாக நேற்று (29) அறிவித்துள்ளன. அதன் பிரகாரம், 20 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட லொத்தர் சீட்டின் விலை 40 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை அதிகரிப்பு ஜூலை மாதம் 06ஆம் திகதி முதல் அமுலுக்கு வருமென தேசிய லொத்தர் சபையும் அபிவிருத்தி லொத்தர் சபையும் அறிவித்துள்ளன.

## முந்தல் வாகன விபத்தில் விஜயகலாவுக்கு காயம்

### தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதி

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் பயணித்த வாகனம் புத்தளம், முந்தல் பகுதியில் நேற்று (29) காலை விபத்துக்குள்ளானதில் அவர் உள்ளிட்ட மூவர் காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த விஜயகலா மகேஸ்வரன் புத்தளம் ஆதார வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

02 பக்கம்



## 57 மில்லியன் வங்கிக் கணக்குகள் பாதுகாப்பு

### ஊழியர் சேமலாப நிதியங்கள் மீது கைவைக்கப்போவதில்லை என்கிறார் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க



ஏற்கனவே 50வீதத்துக்கும் அதிகமான வரி ஊடாக திறைசேரிக்கும் பொருளாதாரத்துக்கும் பங்களிப்புச் செய்யும் வங்கிக் கட்டமைப்பின் மீது தொடர்ந்தும் சுமையை அதிகரிக்கப் போவதில்லை என்றும் வங்கிக் கணக்கு வைப்பாளர்களின் 57 மில்லியன் வங்கிக் கணக்குகளையும் பாதுகாப்பதை உறுதி செய்வதாகவும் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

நாட்டின் வங்கித் துறையில் சரிவு ஏற்பட்டால், மோசமான விளைவுகள் ஏற்படும் என்பதால் வங்கித் துறையைப் பாதுகாக்க வேண்டியது அத்தியாவசியமானது என்பதோடு, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கு பாராளுமன்றத்தின் அனுமதியை பெற்றுக்கொள்ளும்...

02 பக்கம்

## இரு ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமனம்

தேர்தல்கள் மற்றும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள் ஜனாதிபதியினால் பெயரிடப்பட்டுள்ளனர். துறைசார் நிபுணத்துவம் கொண்டவர்களுக்கு மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எல்.டீ.பி.தெஹிதெனியவும் ஏனைய உறுப்பினர்களாக நிமலசேன கார்தியா புந்திஹேவா, தையமுத்து தனராஜ், பேராசிரியர் பர்சானா பாத்திமா மற்றும் கலாநிதி தினுக் குணத்திலக ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் புதிய தலைவராக முன்னாள் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்கவும் ஏனைய உறுப்பினர்களாக எம்.ஏ.பத்மசிறி சந்திரவன்ச பெரேரா மற்றும் அமீர் மொஹமட் பாயிஸ் உள்ளிட்டவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



புனித ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு மௌலானா குலாம் மொஹம்மட் மிஸ்பாஹ் தலைமையில் விசேட தொழுகை கொழும்பு காலிமுகத்திடலில் நேற்று (29) காலை இடம்பெற்றது. படப்பிடிப்பு: லலித் பெரேரா

### கமெண்ட் சுந்தர்...



காக்கைச் சிறகினிலே
நந்தலாலா... ஓ...
கடன் மறுசீரமைப்புக்கு
கதை சொல்லுறார்
நந்தலாலா..

## 50 வைத்தியசாலைகள் மூடப்படும் அபாயம்

### ஜே.வி.பி.எச்சரிக்கை

02 பக்கம்

## சீனாவில் குரங்குகளுக்கு மனித அன்பு கிடைக்கும்

### அமைச்சர் அமரவீர நம்பிக்கை



கே. சுபானி

சீன மிருகக்காட்சிசாலைக்கு குரங்குகளை வழங்கினால் அவை மனிதர்களின் அன்பு, ஆதரவுடன் வாழும். வனவிலங்குகளால் பயிர்கள் அழிவடைவதை தடுப்பது குறித்து எம்மிடம் கேட்கவேண்டாம் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மேலும், வனவிலங்குகள் பயிர்களை சேதப்படுத்துவதால் விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்புகள் குறித்து கொழும்பில் டொலர்களை நம்பி ஏசி அறைகளில் சுகபோக வாழ்க்கை நடத்துவோருக்கு புரியப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு குரங்குகளை ஏற்றுமதி செய்யும் வேலைத்திட்டம் குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு...

02 பக்கம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேன யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்று (29) வழிபாடுகளில் ஈடுபட்டார். இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். படப்பிடிப்பு: யாழ். செய்தியாளர்

## தெற்கில் அதிபர் இல்லாமல் இயங்கும் 323 பாடசாலைகள்

தென் மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் 323 அதிபர் பதவி வெற்றிடங்கள் காணப்படுவதாக தென் மாகாண ஆளுநர் கலாநிதி வில்லி கமகே தெரிவித்தார்.

அங்கு ஆயிரத்து 523 அதிபர்கள் இருக்க வேண்டும் என்றும் ஆனால், தற்போது 978 அதிபர்கள் இருப்பதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்பாடசாலைகளில் அதிபர் பதவிகளுக்கு பதில் கடமையாற்றும் அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக கூறும் தென் மாகாண ஆளுநர், கல்வி உத்தியோகத்தர்களுக்கான 60 வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றார்.

மேலும், 223 கல்வி அலுவலர்கள் இருக்க வேண்டும் என்றும் ஆனால், தற்போது 174 பேர் இருப்பதாகவும் குறிப்பிட்ட ஆளுநர்,...

➤ 02 பக்கம்

## 700 மில். டொலர் உலக வங்கி உதவி

கே. சுபானி

இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளும் பொருட்டு வரவு - செலவு மற்றும் நலன்புரித் திட்ட உதவியாக 700 மில்லியன் அமெரிக்க டொலரை உலக வங்கி நேற்று (29) அங்கீகரித்துள்ளது.

இந்த நிதியுதவியில் 500 மில்லியன் டொலர் வரவு – செலவுத்திட்டத்துக்கு உதவியாகவும் மிகுதி 200 மில்லியன் டொலர் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டோருக்கு நலன்புரி உதவியாகவும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அணுகுமுறையின் மூலம் ஆரம்பகால பொருளாதார ஸ்திரப்படுத்தல், கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் பொருளாதார ரீதியாக நலிவுற்றோரின் பாதுகாப்பு குறித்து அக்கறை செலுத்துவதாக உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பாரிஸ் ஹடாட் ஸெர்வோஸ் தெரிவித்துள்ளார்.

## 08 இலட்சம் சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிட வசதியில்லை

கே. சுபானி

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதற்கு போதியளவிலான இயந்திரங்கள் இன்மையால் சுமார் 8 இலட்சத்துக்கும் அதிகமான சாரதி அனுமதிப் பத்திர அட்டைகள் பலமாதங்களாக வழங்கப்படாதுள்ளதுடன், ஜூன் 19ஆம் திகதி முதல் வழங்கப்படவிருந்த தற்காலிக சாரதி அனுமதிப் பத்திர காலம் மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்படுவதாகவும் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதற்கான புதிய அச்சு இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக சுமார் 20 கோடி ரூபா செலவிடவேண்டியுள்ளது. இதனால் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கணினி அமைப்புக்கு பொறுப்பான நிறுவனம் 'கார்ட்'களை ...

02 பக்கம்

### உஷ்



கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சுமந்திரன் எம்.பி. ஏற்பாடு செய்திருந்த கட்சித் தலைவர்களின் விசேட கூட்டம் ஒன்று கொழும்பில் நேற்றுமுன்தினம் இரவு நடந்தது.

ஊழியர் சேமலாப நிதியில் இந்த மறுசீரமைப்பு தாக்கத்தை ஏற்படுத்துமா என்று சுமந்திரன் கேட்க, அதற்கு சரியான பதிலை வழங்காமல் மழுப்பினாராம் அந்த கூட்டத்தில் கலந்துகொண்ட மத்திய வங்கி ஆளுநர். ஆளுநர் கூறுவது சரியென்பதுபோல பாராளுமன்ற நிதிக்குழுவின் தலைவர் ஹர்ஷவும் பேசினாராம்.

ஆனாலும் சுமந்திரனும் ரவூப் ஹக்கீமும் மத்திய வங்கி ஆளுநரையும் ஹர்ஷவையும் கேள்விகளால் வாட்டியெடுத்ததாக தகவல். ஊழியர் சேமலாப நிதியத்தில் கைவைக்கப்போய் வம்பை விலைக்கு வாங்குவீர்கள் என்று அரசாங்கத்தரப்புக்கு எச்சரிக்கையும் விடுத்தனராம் இந்த எம்.பிக்கள்.

## ஐ.எம்.எவ். நிதியுதவிக்கு இந்தியா தான் காரணம்

### உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவிப்பு



இலங்கைக்கு இந்தியா நிதியுதவி வழங்கியமை காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைத்ததாக இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை அரசு கடந்த ஆண்டு கடும் நிதி நெருக்கடியில் சிக்கியது. அப்போது, இலங்கை அரசுக்கு இந்தியா ரூ.32 ஆயிரம் கோடி நிதியுதவி வழங்கியது.

இந்தியா இந்த உதவியைச் செய்யாமல் இருந்திருந்தால் இலங்கை மிகவும் மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கும். குறிப்பாக, இந்தியா நிதியுதவி வழங்கியதால்தான் சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எவ்.) நிதியுதவி இலங்கைக்கு கிடைத்தது.

02 பக்கம்

## 57 மில்லியன் வங்கிக்...

வரையில் பணப்புழக்கம் தொடர்பிலான ஊகங்களை தடுப்பதற்காகவே இன்று வெள்ளிக்கிழமை (30) வங்கி விடுமுறையாக அறிவிக்கப்பட்டதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

ஊழியர் சேமலாப நிதியத்தின் மீது கைவைக்கும் எண்ணம் இல்லையென உறுதியளிக்கும் மத்திய வங்கி ஆளுநர், ஊழியர் சேமலாப நிதியத்துக்கு குறைந்தபட்சம் 9வீத வட்டி வீதத்தை உறுதிப்படுத்த முடியும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நேற்று (29) ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டபோதே மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, திறைசேரியின் செயலாளர் ஏ.கே.செனவிரத்ன ஆகியோரின் பங்குபற்றலுடன் நடைபெற்ற இந்த ஊடகவியலாளர் மாநாட்டில், ஊடக நிறுவனங்களின் பிரதானிகள் சிலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க,

அரசாங்கத்தின் கடன்களை நிலையான தன்மைக்கு கொண்டு வர வேண்டுமெனில் சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்டுள்ள இணக்கப்பாடுகளுக்கமைய 10 வருடங்களுக்குள் ஓரளவு ஸ்திரமான தன்மையை பேண வேண்டியது அவசியமாகும். உதாரணமாக கூறுவதாயின் 2022ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் மொத்த தேசிய உற்பத்தி வீதம் 128 ஆக பதிவாகியது. இருப்பினும், 2032ஆம் ஆண்டில் 95 சதவீதமென்ற குறைந்த சதவீதத்துக்கு கொண்டு வர வேண்டியிருந்தது. அதுவே முதலாவது அளவுகோலாகும். அடுத்ததாக அரசாங்கத்தின் வருடாந்த நிதிசார் தேவைகள் தற்போது 34.6சதவீதமாக காணப்படுகின்ற நிலையில், 2027- 2032 வரையான ஐந்து வருடங்களில் 13 சதவீதம் அல்லது அதற்கு குறைந்த மட்டத்துக்கு கொண்டு வர வேண்டியது அவசியமெனவும் மூன்றாவது அளவுகோலாக தற்போது 9.4 வீதமாக காணப்படும் வெளிநாட்டு கடன் சேவைகளை 2027-2032 வரையான காலப்பகுதியில் 4.5சதவீதமாக வரையறுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும் என்றும் தெரிவித்தார்.

மேற்படி இலக்குகளை அடைந்துவிட்டால் மேலதிக நிதி இடைவெளியினை (external Financing gap) நிரப்புவதற்கான சலுகையாக 16.9 அமெரிக்க டொலர்கள் குறைவடையும். குறித்த இலக்குகளின் நிறைவில் மேலும் மூன்று விடயங்களை சாத்தியமாக்கிக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அதற்காக முதலில் உத்தியோகபூர்வமான கடன் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டும். அது தொடர்பிலான பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. அடுத்ததாக வணிக ரீதியில் தனியார் பிணைமுறிகளாக பெற்றுக்கொண்ட பணம், அது தொடர்பிலும் கலந்துரையாடப்படுகிறது. மூன்றாவதாக உள்நாட்டு கடன்கள் ஓரளவு மறுசீரமைப்புச் செய்தல் உள்ளிட்ட முயற்சிகள் ஊடாக கடன் நீடிப்புகளை மேற்கொள்ள முடியும்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பின் போது அரசின் மொத்த நிதித் தேவைக்காக (gross financial need) பெறப்படும் கடன்களை குறைப்பது அவசியமாகும். அதற்காக முன்வைக்கப்பட்ட யோசனைகளை செயற்படுத்தினால் 12.7 சதவீதத்தினால் குறைத்துக்கொள்ள முடியும்.

13 ஐ விடவும் குறைந்த மட்டத்தில் அதனை பேண வேண்டும். அதனை சரியாக செயற்படுத்தினால் மூன்று தசம் அளவிலான இடைவெளியொன்றும் உருவாகும். இதனை சரியாக செயற்படுத்தினால் மொத்த தேசிய உற்பத்தி விகிதத்தின் கடன் தொகை சதவீத அடிப்படையில் 90% ஆக குறைவடையும்.

தற்போது திறைசேரியின் கடன் பத்திரங்கள் 4.1 டிரில்லியன்களாக காணப்படுகின்றன. அவற்றில் 62.4வீதம் மத்திய வங்கியிடமே உள்ளது. நாம் அறிந்த வகையில் திறைசேரியின் கடன் பத்திரங்களை நீடிக்கப்பட்ட திறைசேரி பிணைமுறிகளாக மாற்றுவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது.

அது போதுமானதல்ல என்பதால் மிகுதி தொகையை பெற்றுக்கொள்வதற்காக நாம் திறைசேரி பிணைமுறிகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது. தற்போது 8.7 டிரில்லியன்கள் பெறுமதியான திறைசேரி பிணைமுறிகள் காணப்படுகின்றன. 36.5% (superannuation fund) இலும் 36 சதவீதமானவை வங்கிகளிலும் காணப்படுகின்றன. ஏனைய பகுதிகள் காப்புறுதி மற்றும் தனியார் நிறுவனங்களிடத்தில் உள்ளன.

இங்கு மத்திய வங்கி கட்டமைப்பு மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றை பாதுகாக்க முயற்சிக்கின்ற அதேநேரம் ஊழியர் சேமலாப நிதியத்தின் பொறுப்பாளராகவும் மத்திய வங்கியே செயற்படுகின்றது.

அந்த நிலைப்பாட்டிலிருந்தே மத்திய வங்கி இந்த விடயத்தில் தலையீடு செய்கிறது. அதற்கமைய மக்களின் வைப்புக் கணக்குகள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் போன்ற பொது நிதியங்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காகவே மத்திய வங்கி மேற்படி செயற்பாடுகளுடன் தொடர்புபட்டு இணங்கிச் செயற்படுகின்றது.

இந்த யோசனைகளின் அடிப்படையில் பார்க்கின்றபோது வங்கிகள் தற்போதும் அரசாங்கத்தின் கடன் சுமைகளை குறைப்பதற்கு அவசியமான பெரும் பங்களிப்பினை வழங்கியுள்ளன.

குறிப்பாக தற்போது 50 சதவீதத்துக்கும் அதிகமான வரிகளை வங்கிகளே செலுத்துகின்றன. அவற்றில் 30% நிறுவன வரியாகவும் 18 சதவீதம் நிதிச் சேவை வரியாகவும் 2.5% சமூக பாதுகாப்புக்கான உதவியாகவும் வழங்கப்படுகின்றது.

அதற்கமைய தற்போதும் வங்கிகளின் வருமானத்தில் 50 சதவீதத்தை அரசாங்கத்துக்கு செலுத்தி பங்களிப்பினை வழங்கி வருகின்றன. அதற்கு நிகராக (superannuation fund) நிதியங்கள் 14வீதம் என்ற குறைந்த மட்டத்திலேயே வரிகளை அறவிடுகின்றன.

அதன்படி முதலாவது விடயத்துக்கு வங்கிக் கட்டமைப்பிடமிருந்து தற்போதும் ஒத்துழைப்பு கிடைக்கிறது. இரண்டாவது விடயம், கடந்த காலங்களில் நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக கடனை செலுத்துவதில் வங்கிகள் சிரமத்தை எதிர்கொண்டிருந்தன.

மேலும் வழங்கப்பட்ட சலுகை காலங்களின்படி, கடன்களை மீளச் செலுத்தாமையினால் டிரில்லியன் கணக்கிலான நட்டத்தையும் எதிர்கொண்டுள்ளன. அத்தோடு கடந்த காலங்களில் 1.6 டிரில்லியன்கள் பெறுமதியான சலுகை காலத்தை வழங்கியுள்ள நிலையில் தற்போதும் வங்கி கட்டமைப்பினால் பொருளாதாரத்துக்கு குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பு கிடைக்கின்றது.

அதேபோல் வங்கி கட்டமைப்புகளை பாதுகாத்தல் மற்றும் வைப்பாளர்களின் பணத்துக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாதவாறு பாதுகாத்தல் என்பன முதன்மை பொறுப்புகளாகும்.

அவர்களும் வரியின் ஊடாக பொருளாதாரத்துக்கும் திறைசேரிக்கும் பெருமளவான பங்களிப்புகளை வழங்கியுள்ளனர்.

வங்கிகளுக்குள் காணப்படும் கணக்கு வைப்பாளர்களின் கணக்குகளின் எண்ணிக்கை 57 மில்லியன்களாக காணப்படுகின்றது. நாட்டிலிருப்பது 20 மில்லியன் மக்கள் தொகையாக உள்ளபோதும் 57 மில்லியன் வங்கிக் கணக்குகள் காணப்படுகின்றன. அந்த நிதிக்கு பாதிப்பு ஏற்படுமாயின் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

# மானிப்பாயில் விபத்து: இருவர் உயிரிழப்பு



மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி வீதி, கலுண்டாய் சந்தி பகுதியில் நேற்று (29) பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

அராலியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் யாழ்ப்பாணத்திலிருந்து அராலி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் அராலி மத்தியைச் சேர்ந்த ஜெயசுந்தரம் சரோஜன் (வயது 29) என்பவரும் வட்டுக்கோட்டை சங்கரத்தையைச் சேர்ந்த மகேஸ்வரன் மதுரன் (வயது 37) என்பவரும் விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

அவர்கள் இருவரது சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து பயணித்த அராலி மத்தி பகுதியைச் சேர்ந்த இராசதுரை சூரியகுமார் (வயது 29) என்பவர் சிறு காயமடைந்துள்ளார்.

இந்நிலையில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அஸ்வெசும தொடர்பில் 390,000 முறைப்பாடுகள்

அஸ்வெசும நலன்புரித் திட்டம் தொடர்பாக மூன்று இலட்சத்து 90 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரித் திட்டம் தொடர்பில், தற்போது கிடைக்கப்பெற்றுள்ள மேன்முறையீடுகள் தொடர்பில் ஆராய அடுத்த வாரம் விசாரணைக்குழு நியமிக்கப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மாவட்ட செயலாளர்களின் மேற்பார்வையில் இந்தக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

எவ்வாறாயினும், அஸ்வெசும திட்டம் தொடர்பான மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க ஜூலை மாதம் 10ஆம் திகதி வரை பொதுமக்களுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உலக வங்கியிடமிருந்து பெறப்படவுள்ள 700 மில்லியன் டொலர் நிதி ஒதுக்கீட்டில் 200 மில்லியன் டொலர் அடுத்த மூன்று நாட்களில் நாட்டுக்கு கிடைக்கவுள்ளது. அந்தத் தொகையை சமூகப் பாதுகாப்புத் திட்டத்துக்குப் பயன்படுத்த இணங்கப்பட்டுள்ள நிலையில், அதனை அஸ்வெசும திட்டப் பணிகளுக்குப் பயன்படுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.




**ஹொங்கொங்கில் நடைபெற்ற ஆசிய பசுபிக் ஆபிரிக்க பளு தூக்கும் போட்டியில் இலங்கை சார்பாக கலந்து கொண்ட புசாந்தன், ஸ்குவாட் முறையில் 325 கிலோவை தூக்கி 3ஆம் இடம்பெற்று வெண்கல பத்தக்கத்தினை பெற்றுள்ளார். யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதியை சேர்ந்த சற்குணராசா புசாந்தன் பல போட்டிகளில் கலந்து கொண்டு சாதித்தமை குறிப்பிடத்தக்கது.**

## தெற்கில் அதிபர் இல்லாமல்...

கல்வி அமைச்சு தரப்படுத்தப்பட்ட அதிபர்களை நியமித்து மாகாண சபைக்கு விடுவித்தால் அதிபர் வெற்றிடங்கள் உள்ள பாடசாலைகளுக்கு அந்த அதிபர்களை நியமிக்க முடியும் என ஆளுநர் கலாநிதி வில்லி கமகே மேலும் தெரிவித்துள்ளார்.

## ஐ.எம்.எவ். நிதியுதவிக்கு...

இலங்கையின் ஒட்டுமொத்த கடன் ரூ.2.46 இலட்சம் கோடியாக உள்ளது. இதில் சீனாவுக்கு செலுத்த வேண்டிய கடன் மட்டும் ரூ.46 ஆயிரம் கோடி ஆகும். இலங்கையின் பொருளாதார வளர்ச்சி கடந்த ஆண்டு மைனஸ் 7.8 வீதமாக குறைந்தது.

இது இந்த ஆண்டில் மைனஸ் 2 வீதமாக இருக்கும் என கருதப்படுகிறது. எனவே, நாட்டின் பொருளாதார கொள்கைகளில் சீர்திருத்தங்களை செய்ய வேண்டியது அவசியமாகிறது.

மேலும், இந்தியா-இலங்கை இடையிலான உறவை மேம்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

இதற்காக, இந்தியாவுடனான வர்த்தகத்தை அதிகரிப்பது உட்பட பல்வேறு முயற்சிகளை இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது. கடல் பகுதி, பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பில் இந்தியாவுடன் இணைந்து செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.06.28
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5159
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 7 6 6 9 7 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3401
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,221,432.40
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 08 31 37 77

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1614
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,082,173.12
வெற்றி இலக்கம்
வெற்றி இலக்கங்கள் 3 8 2 5 6 5

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1189
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,352,831.20
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 20 21 69 77

ராசிசுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் 468
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00
வெற்றி இலக்கம்
வெற்றி இலக்கங்கள் 05 15 42 55
விசேட இலக்கம்

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1507
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 332,804,686.00
ஆங்கில எழுத்து H
12
வெற்றி இலக்கங்கள் 11 21 35 52
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

# மின்சாரம் தாக்கி விவசாயி உயிரிழப்பு

*மட்டக்களப்பு செய்தியாளர்*

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னவத்தை கிராமத்தில் வியாழக்கிழமை(29) மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் 28 வயதுடைய கொணாகொல்ல பகுதியைச் சேர்ந்த இ.ஜி.சஜிந்த றங்கண என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவதினம் கொணாகொல்ல பகுதியிலிருந்து சின்னவத்தையில் தான் மேற்கொண்டிருந்த வேளாண்மைச் செய்கையை பார்வையிடுவதற்காக வந்துள்ள நிலையில், வயல் பாதுகாப்புக்காக போடப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்குண்டு உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 08 இலட்சம் சாரதி...

அச்சிடும் இயந்திரங்களை பெற்று பத்திரமொன்று 150 ரூபா அறவிடும் நடைமுறையுடன் சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதற்கு அமைச்சரவை அனுமதியை பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவிக்கையில்,

சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதற்கான அட்டைகள் பற்றாக்குறையாகவுள்ளதால் ஆறு மாதங்களுக்கும் மேலாக சுமார் 08 இலட்சத்துக்கும் அதிகமான சாரதி அனுமதிப் பத்திரங்கள் அச்சிடப்படாமலுள்ளன. அந்த சாரதி அனுமதிப் பத்திர அட்டைகள் தனியார்துறையிடம் அச்சிடுவதற்கு வழங்கும் யோசனை அமைச்சரவையின் அனுமதிக்காக வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

## சீனாவில் குரங்குகளுக்கு...

பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

குரங்குகளை சீன மிருகக்காட்சிசாலைக்கு வழங்குவது தொடர்பிலான வேலைத்திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து சுற்றுசூழல் ஆர்வலர்களால் முன்னெடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளால் அத்திட்டம் கைவிடப்பட்டது. எனினும், மீண்டும் சீனாவின் தனியார் நிறுவனமொன்று குரங்குகளை பெற்றுகொள்வதற்கு முன்வந்துள்ளது.

வனவிலங்குகளால் பயிர்கள் சேதப்படுத்தப்படுவதை தடுப்பது தொடர்பில் சுற்றுச்சூழல் அமைப்புகள் உள்ளிட்ட மேலும் பல தரப்பினரிடமிருந்து விவசாய அமைச்சுக்கு யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

அதில் சேலைகளை தொங்க விடுதல், விவசாய நிலத்தை சுற்றி தகரங்களை கட்டுதல், பயிர்நிலத்தின் அரை ஏக்கரை வனவிலங்குகளின் உணவுக்காக வழங்குதல் போன்ற பல்வேறு யோசனைகளை முன்வைத்தனர்.

சீன மிருகக்காட்சிசாலைக்கு குரங்குகளை வழங்கினால் அவை மனிதர்களின் அன்பு, ஆதரவுடன் வாழும்.

பயிர்நிலங்களை பாதுகாப்பதற்காக விவசாயிகள் துப்பாகிகளை கேட்கிறார்கள். இவ்வாறு சென்றால் இறுதியில் என்ன நடக்கும் என இதன்போது அமைச்சர் மஹிந்த அமரவீர கேள்வியெழுப்பினார்.

## முந்தல் வாகன விபத்தில்...

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த வேன், முந்தல் மங்கள எலிய பகுதியில் மரமொன்றின் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதனால் அந்த வாகனம் பெரும் சேதத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அசித லக்ருவன் மற்றும் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி ஆர். எச்.எம். ராஜகருணா ஆகியோர் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



## 50 வைத்தியசாலைகள்...

நாட்டில் சுமார் 18,600 அரச வைத்தியர்கள் இருந்தபோதிலும் அவர்களில் 1500-1700 பேர் கடமையிலிருந்து வெளியேறியுள்ளனர் என்றும் கிட்டத்தட்ட 50 வைத்தியசாலைகள் மூடப்படும் அபாயம் உள்ளதாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மேலும், 103 இருதயநோய் மருத்துவர்கள் இருக்க வேண்டும் என்றாலும் 57 பேர் வரையே இருப்பதாகவும் அவர்களில் 08 பேர் டிசம்பர் மாதத்துக்குள் ஓய்வு பெறுவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

வைத்தியர்களுக்கான பற்றாக்குறையால் நாட்டில் 50க்கும் மேற்பட்ட புற மருத்துவமனைகள் மூடப்படும் அபாயம் உள்ளது என்றும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது,

''2028க்குள் 418 பிசியோதெரபிஸ்ட்கள் இருக்க வேண்டும். தற்போது 240 பேரே உள்ளனர். டிசம்பர் மாதத்துக்குள் அவர்களில் 22 பேர் ஓய்வு பெறுவார்கள். 247 சத்திரசிகிச்சை நிபுணர்கள் இருந்தனர். ஆனால் தற்போது 145 பேர் மட்டுமே உள்ளனர். அவர்களில் 23 பேர் டிசம்பரில் ஓய்வு பெறுகின்றனர்.

302 குழந்தைகள் நல மருத்துவர்கள் இருந்த நிலையில் தற்போது 146 பேர் மட்டுமே உள்ளனர். அவர்களில் 28 பேர் டிசம்பர் இறுதிக்குள் ஓய்வு பெறுவார்கள். மகப்பேறு மற்றும் மகப்பேறு நிபுணர்கள் 24 பேர் இதுவரை நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். 284 மயக்க மருந்து நிபுணர்கள் இருந்தனர் ஆனால் தற்போது 129 பேர் மட்டுமே உள்ளனர். அவர்களில் 18 பேர் ஆண்டு இறுதிக்குள் ஓய்வு பெறுவார்கள்.

103 இருதயநோய் மருத்துவர்கள் இருக்க வேண்டும். ஆனால் 57 பேர் மட்டுமே உள்ளனர். அவர்களில் 08 பேர் டிசம்பர் மாதத்துக்குள் ஓய்வு பெறுவார்கள். 129 தோல் மருத்துவர்கள் இருக்க வேண்டிய நிலையில் தற்போது 66 பேர் மட்டுமே உள்ளனர். அவர்களில் 08 பேர் டிசம்பரில் ஓய்வு பெறுவர்.

பல வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். இதனால், மருத்துவமனைகளில் சில வார்டுகள் முற்றிலும் செயல்படாமல் உள்ளன. சுமார் 18,600 பொது மருத்துவர்கள் உள்ளனர், 1500-1700 பேர் இதுவரை வெளியேறியுள்ளனர். நம் நாட்டில் கிட்டத்தட்ட 50 மருத்துவமனைகள் மூடப்படும் அபாயம் உள்ளது.

சில மருத்துவமனைகளில் அவசர அறுவை சிகிச்சை மட்டுமே செய்யப்படுகிறது. வைத்தியர்கள் மற்றும் விசேட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது பாரதூரமான நிலைமை என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஏழு வீதத்தால் பஸ் கட்டணத்தை அதிகரிக்க ஆணைக்குழு பரிந்துரை

## புதிய திருத்தம் பொருத்தமற்றது என்கிறது தனியார் பஸ் சங்கம்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள பஸ் கட்டண அதிகரிப்பு அவசியமில்லையெனத் தெரிவித்துள்ள தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம், கொரோனா தொற்றுப் பரவல் காலத்தில் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டதால் புதிய திருத்தம் மேற்கொள்வது பொருத்தமற்றது என வலியுறுத்தியுள்ளது.

அதற்கமைய, 7 சதவீதத்தால் பஸ்கட்டணத்தை அதிகரிக்க போக்குவரத்துச்சபை பரிந்துரைத்துள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (29)இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நாளையுடன் (01) வருடாந்த பஸ் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது. ஒவ்வொரு வருடமும் இந்தக் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தேசியக் கொள்கையிலுள்ள மூலோபயங்களின் அடிப்படையில் பல்வேறு காரணங்களைக் கொண்டு பஸ் கட்டண அதிகரிப்பு, குறைப்பு இடம்பெறுகின்றன.

கொள்கைகளின் அடிப்படையில் பஸ் கட்டணம் தயாரிக்கப்பட்டதன் பின்னர் 7 சதவீத அதிகரிப்புக்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக எங்களுக்கு அறிவிக்கப்பட்டது. சங்கமென்ற அடிப்படையில், 7 சதவீத பஸ் கட்டண அதிகரிப்பை அதிகரிக்கவேண்டிய அவசியமில்லை என்று தேசிய போக்குவரத்துச் சபைக்கு அறிவித்திருக்கிறோம்.

அதற்கு காரணம், கொரோனா காலத்தில் 20 சதவீத கட்டண அதிகரிப்பு இடம்பெற்றிருந்தது. இதற்கிடையில் 10 வீத கட்டணக் குறைப்பை மேற்கொண்டிருந்தோம். மேலும் 10 வீத குறைப்பு மேற்கொள்ளவேண்டியிருந்தது. ஆனால், அதனைச் செய்யவில்லை. எனவே, தற்போது மேற்கொள்ளவேண்டியுள்ள 7 சதவீத அதிகரிப்பை கொரோனா காலத்தில் மேற்கொள்ளப்பட்ட விலைச் சூத்திரத்துடன் இணைத்துக்கொள்ளுமாறு அறிவித்திருக்கிறோம்.

தேசிய கொள்கையிலிருக்கும் சம ஒதுக்கீட்டில் பிரச்சினை ஏற்படும். அது எதிர்காலத்தில் பாரதூரமான விளைவை ஏற்படுத்தும். தொழிற்றுறையிலும் பாரதூரமான பிரச்சினையை ஏற்படுத்தும். அதன் காரணமாகவே இம்முறை பஸ் கட்டண திருத்தமொன்றை மேற்கொள்ளவேண்டிய அவசியமில்லை. தற்போது நடைமுறையிலுள்ள பஸ் கட்டணத்தையே தொடர்ந்து பயன்படுத்தலாம் என்று போக்குவரத்துச்சபைக்கு அறிவித்துள்ளோம்.

மக்கள் சார்பில் சிந்தித்து பஸ் கட்டணத்தை அதிகரிக்காமலிருப்பது தொடர்பில் எங்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. இம்முறை பஸ் கட்டண அதிகரிப்பை மேற்கொள்ளவில்லை. பிரதேச மட்டத்திலான சங்கங்களும் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன. தற்போதுள்ள கட்டணத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்த்துள்ளோம்.

கிராமிய பிரதேசங்களில் 10 தொகுதிகளைக் கொண்ட சிறயளவான வேன்கள் அல்லது பயணிகளின் தேவைக்கேற்ப வாகனங்களை சேவையில் ஈடுபடுத்த எதிர்பார்த்துள்ளோம். மேலும், எதிர்வரும் சில மாதங்களில் பஸ் நடத்துனர்களுடனோ அல்லது இல்லாமலோ பஸ் கட்டண சீட்டினூடாக போக்குவரத்து வசதியைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்துள்ளோம். புதிய பஸ்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டதும் அந்த பஸ்களுக்கு நடத்துனர்கள் தேவைப்பட மாட்டார்கள். கட்டண அட்டையைப் பயன்படுத்தி அவற்றில் பயணிக்கக்கூடியதாக இருக்கும். மிக விரைவாக இந்த பஸ்களை குறைந்தது மூன்று மாதங்களில் நாட்டுக்கு கொண்டுவர முயற்சிக்கிறோம் - என்றார்.





முஸ்லிம் லெப்ட் போரன்ட் ஏற்பாட்டிலான ஹஜ் பெருநாள் தொழுகை பேருவளை பீச் திடலில் நடைபெற்றபோது...
(படங்கள் - பீ.எம்.முக்தார்)

## நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருமஞ்சத்திருவிழா







வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருமஞ்சத்திருவிழா நேற்று முன்தினம் (28) இடம்பெற்றது.

இவ்வாலய மஹோற்சவ கொடியேற்றம் கடந்த 19 ஆம் திகதி ஆரம்பமானது. இதனையடுத்து இந்த ஆலயத்தின் திருவிழா ஆரம்பமாகியிருந்ததுடன் இந்தப் பெருவிழாவில் நாளை (01) சப்பறத் திருவிழாவும் நாளை மறுதினம் (02) தேர்த்திருவிழாவும் திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் 04ஆம் திகதி தெப்போற்சவமும் இடம்பெறவுள்ளன.

இதில் பல பாகங்களிலிருந்தும் வருகைதந்த பக்தர்கள் பக்திபூர்வமாக அருட்கடாட்சத்தைப் பெற்றுச் சென்றனர்.



தலவாக்கலை கூம்மூட் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட ட்றூப், கொரின், கிளனமோறா மற்றும் கட்டுக்கலை ஆகிய தோட்டப் பகுதிகளில் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் சிலர் பாடசாலைக்குச் செல்ல முடியாமல் கஷ்டத்திலிருந்தவேளை அவர்களை மீண்டும் பாடசாலைகளுக்கு அனுப்ப இப்பகுதிக்குப் பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தர் என்.யோகரட்ணம் மற்றும் தலவாக்கலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமந்த பெரேரா ஆகியோர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (படங்கள் - தலவாக்கலை நிருபர்)

# சிங்கராஜ வனத்திலிருந்து உயிரினங்களை கடத்த முயற்சி

## ஈரானியர்கள் மூவர் கைது

ஏ.ஏ.எம்.பாயிஸ்

சிங்கராஜ வனத்திலிருந்து சட்டவிரோதமாக உயிரினங்களை எடுத்துச் செல்ல முயற்சித்த ஈரானிய பிரஜைகள் மூவரும் இலங்கை பிரஜையொருவருவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து சில அரியவகை உயிரினங்களும் மூலிகை வகைகளும் மீட்கப் பட்டுள்ளதாக வனப்பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர்.

சிங்கராஜ வனப்பாதுகாப்பு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனையடுத்து இவர் கள் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப் படவுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வீதி செப்பனிடும் இயந்திரத்தை திருடியவர்கள் தொடர்பில் விசாரணை



கலஹா செய்தியாளர்

நாவலப்பிட்டி பிரதேசத்ததில் வீதி அபிவிருத்திக்காக கொண்டுவரப்பட்ட 40 இலட்சம் ரூபா பெறுமதியான பாதையை செப்பனிட பயன்படுத்தப்படும் இயந்திரத்தை திருடி ஹொரணை பிரதேசத்திற்கு 6 இலட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்த வைத்தியசாலை ஊழியர் மற்றும் ஆசிரியர் ஒருவர் நாவலப்பிட்டி பொலிஸாரால் தேடப்பட்டு வந்துள்ளனர்.

நாவலப்பிட்டி - சமனலகம வீதியை செப்பனிடுவதற்கான களனி பிரதேசத்தில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றினால் கொண்டுவரப்பட்ட மேற்படி இயந்திரம் அங்குள்ள உள் வீதி ஒன்றில் சில காலம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அப்பிரதேசத்தில் வசித்துவந்த வைத்தியசாலை ஊழியர் அதே பகுதியைச் சேர்ந்த பெண் கிராம உத்தியோகஸ்தரின் கணவரும் ஆசிரியருமான மற்றைய சந்தேக நபரையும் இணைத்துகொண்டு குறித்த இயந்திரத்தை இரும்பு விலைக்கு விற்பனை செய்வதாக களனி நிறுவனத்தினால் வழங்கப்பட்டது போன்ற முத்திரையுடன் கூடிய போலி கடிதம் ஒன்றைத் தயாரித்து தரகர் ஒருவர் மூலமாக ஹொரணை பிரதேசத்திற்கு 6 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளனர்.

இதன்போது களனி நிறுவனத்தினால் நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய தீவிர விசாரணைகளை மேற்கொண்டுவந்த பொலிஸார் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் விற்பனை செய்யப்பட்ட இயந்திரத்தை நேற்று (29) நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வந்ததோடு தலைமறைவான சந்தேக நபர்களை கைதுசெய்வதற்கான மேலதிக நடவடிக்கைளும் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# விமானப் படைக்கு புதிய தளபதி நியமனம்





விமானப் படையின் புதிய தளபதி யாக எயார் வைஸ் மார்சல் உதேனி ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

அதற்கமைவான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் நேற்று முன்தினம் (28) காலை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கைளிக்கப்பட்டது.

இலங்கை விமானப்படையின் தற்போதைய பதவிநிலை பிரதானியான எயார் வைஸ் மார்சல் உதேனி ராஜபக்ஷவுக்கு நாளை (30) முதல் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதியினால் எயார் மார்ஷலாக பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

வைஸ் மார்சல் உதேனி ராஜபக்ஷ இந்நாட்டின் 19ஆவது விமானப்படைத் தளபதியாகவுள்ள நிலையில், அவர் கொழும்பு ஆனந்தா கல்லூரியின் மாணவர் என்ற வகையில் ஆனந்தா கல்லூரியில் உருவான முதலாவது விமானப் படைத் தளபதியாகவும் கருதப்படுவார்.

1988 ஆம் ஆண்டில் பயிலுநராக கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் இணைந்துகொண்டதோடு அநுராதபுரம் முகாமில் தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்த அவர், முதலாம் இலக்க 33ஆவது விமானப்படை பயிற்சி பாடநெறியில் பங்குபற்றி பாடநெறியின் மிகச்சிறந்த பயிலுநராகவும் தெரிவு செய்யப்பட்டார். பின்னர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளில் விமானப்படை அதிகாரியாக பங்கேற்ற அவர் சிறப்பான திறன்களை வெளிப்படுத்தியுள்ளார். விமானப்படைத் தளபதியாக நியமனம் பெறுவதற்கு முன்பாக அவர் விமானப்படையின் இரண்டாம் நிலை அதிகாரியாக நியமனம் வகித்தமை குறிப்பிடத்தக்கது.

## தினசரி பலாபலன்கள்

### சோபகிருது வருடம் ஆனி மாதம் 15ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**மேஷம்** - முயற்சிகள் சற்று சிக்கலைக் கொடுக்கும், பொறுமை அவசியம், கோபத்தால் வீண் பிரச்சினைகள் தோன்றலாம்.

**ரிஷபம்** - நினைத்த காரியத்தில் வெற்றி, கேட்ட கடனுதவி இன்று கிடைக்கப் போகின்றது, மனமகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.

**மிதுனம்** - தேவையற்ற சிந்தனைகளால் உடல் நலம் பாதிக்கப்படலாம், மனதை சமாதானப்படுத்த வழிபாடு செய்யுங்கள்.

**கடகம்** - குடும்பத்தாருடன் சந்தோஷமாக இருப்பீர்கள், வாகனத்தால் வீண் செலவு அல்லது தொல்லை உண்டு கவனம்.

**சிம்மம்** - நீண்ட நாள் முயற்சி செய்த காரியத்தில் வெற்றி கிட்டும், உறவினர் வரவால் அதிக நன்மை களையும் லாபங்களையும் பெறுவீர்கள்.

**கன்னி** - கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாது கவலை அடைவீர்கள், யாருக்கும் கடன் கொடுக்க வேண்டாம்.

**துலாம்** - நினைத்த காரியத்தை சாதித்துக் காட்டுவீர்கள், உடல் நலம் சிறப்பாக இருக்கும்.

**விருச்சிகம்** - குடும்ப உறவில் சிக்கல் ஏற்படலாம், தேவையற்ற பயணங்களால் செலவுகள் ஏற்படும்.

**தனுசு** - தொழில் ரீதியில் நீங்கள் பாராட்டப்படுவீர்கள், பெண்கள் உறவால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**மகரம்** - புதிய தொழில் வாய்ப்புகள் வந்தமையும், திட்டமிட்ட காரியங் களில் வெற்றி பெறுவீர் கள்.

**கும்பம்** - தடைப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணம் நிறைவேறும், சொத்துக் களில் கவனம் செலுத்துங்கள்.

**மீனம்** - திடீர் முடிவுகள் எதையும் இன்றைய நாளில் எடுக்க வேண்டாம், தேவையற்ற பயணங் களை குறைத்துக் கொள்வது நல்லது.

**திதி** : துவாதசி பி.இ.1.17 வரை பின் திரயோதசி (வளர்)
**நட்சத்திரம்** : விசாகம் பி.ப.4.10 வரை பின் அனுஷம்
**யோகம்** : சித்தாமிர்தம் பி.ப 4.10 வரை பின் மரண யோகம்
**வார சூலை** : மேற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்** : மு.ப. 5.54 – 6.54 மணி வரை
**ராகுகாலம்** : 10.24 – 11.54 மணி வரை
**எமகண்டம்** : 2.54 - 4.24 மணி வரை
**குளிகை** : 7.24 – 8.54 மணி வரை
**சந்திராஷ்டமம்** : மீன – மேஷ ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்.
**தனஅதிஷ்டம்** : திருவாதிரை,சுவாதி,சதயம் புனர்பூசம்,விசாகம்,பூரட்டாதி (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்** : -------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739


# வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/

ஜீனியர் தமிழன்

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் வெற்றிக்கு வழிவகுக்கும் மாதிரி வினாத்தாள்கள் மற்றும் விடைத்தாளுடனான விசேட பொதி




பிரபல புலமைப்பரிசில் ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்படுகிறது

பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு!

பிரதிகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

0777983308 / 0761393805

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஜூன் 30ஆம் திகதி, வெள்ளிக்கிழமை



# மோடியின் இராஜதந்திரத்தால் இந்தியாவுக்கு கிடைத்த வெற்றிகள்

இந்திய பிரதமர் நரேந்திரமோடி அண்மையில் மேற்கொண்ட இரண்டு வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பில் இராஜதந்திர வட்டாரங்களின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

எகிப்து ஜனாதிபதி அப்தெல் ஃபடா எல்-சிசி உடனான இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் சந்திப்பின்போது இந்தியாவும் எகிப்தும் தங்கள் உறவுகளை வியூக ரீதியான கூட்டாண்மை எனும் நிலைக்கு மேம்படுத்தலாம் என்று எடுத்த முடிவு, மேற்கு ஆசியா - வட ஆபிரிக்கா (வானா) பிராந்தியத்துடனான இந்தியாவின் உறவுகளைப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிடத்தக்க நகர்வாகும். காரணம், ஒரு வரலாற்று ரீதியான உறவாக இது இருந்திருக்கிறது. இரு நாடுகளும் 1955இல் ஒரு நட்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு இருக்கின்றன.

1956இல் சூயஸ் கால்வாய் நெருக்கடி உள்ளிட்ட சிக்கல்களின்போது எகிப்துக்கு இந்தியா அளித்த ஆதரவு காரணமாக, 1961இல் அணிசேரா இயக்கம் உருவானது. இரு நாடுகளும் அதில் நிறுவன உறுப்பினர்களாக இருந்தன. ஜி-77 குழு மற்றும் 'தெற்கு-தெற்கு ஒத்துழைப்பு' முன்முயற்சிகளிலும் இரு நாடுகளும் முக்கிய பங்காற்றின. சமீபத்திய உக்ரைன் போர் பற்றியும் இரு நாடுகளுக்குமிடையில் ஒரே மாதிரியான நிலைப்பாடுதான் இருக்கிறது. ரஷ்யாவின் நடவடிக்கைகளை விமர்சிக்க மறுத்தாலும் அதை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. தவிர இரு நாடுகளுமே இந்த பிரச்சினைக்கு ஒரு இராஜதந்திர தீர்வுதான் சரியாக இருக்கும் என்று நினைக்கின்றன.

கடந்த ஆண்டு, கருங்கடல் உணவு தானிய முன்முயற்சிக்கு முன்பாக, ரஷ்யா மற்றும் உக்ரைன் மீது விதிக்கப்பட்ட ஏற்றுமதித் தடையால் உலகின் மிகப்பெரிய இறக்குமதியாளர்களில் ஒன்றான எகிப்து பாதிக்கப்பட்டது. அப்போது எகிப்திற்கு கோதுமையை வழங்க இந்தியா எடுத்த முடிவு, அந்நாட்டில் இந்தியாவுக்கு அதிக நன்மதிப்பைப் பெற்றுத் தந்தது. விவசாயம், தொல்லியல் மற்றும் தொல்பொருட்கள் மற்றும் போட்டிச் சட்டம் ஆகியவற்றில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டிருப்பதுடன், பசுமை எரிசக்தி, மருந்துகள் மற்றும் பாதுகாப்புத்துறைகளிலும் இரு நாடுகளுக்குமிடையில் நெருக்கமான ஒத்துழைப்பு இருக்கிறது.

அல்-ஹக்கீம் மசூதிக்கு மோடி சென்றதும், எகிப்தின் கிராண்ட் முப்தியை சந்தித்ததும் கூட இஸ்லாமிய உலகம் பற்றிய தனது அரசின் கொள்கைகள் குறித்த சந்தேகங்களை சரி செய்யும் ஒரு முயற்சிபோல தோன்றியது. பல தரப்பு பிரச்சினைகள், எகிப்தின் அண்டை நாடுகளுடன் (குறிப்பாக இஸ்ரேல் மற்றும் சவூதி அரேபியா) இந்தியா கொண்டிருக்கும் நெருக்கமான உறவுகள், உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்புக் கட்டுப்பாடுகள், ஆபிரிக்க ஒன்றியம் உள்ளிட்ட உலகளாவிய நாடுகளுடன் அதிக ஒத்துழைப்பை உருவாக்குதல் ஆகியவை குறித்து இரு தலைவர்களும் அதிக நேரம் பேசியதாகத் தெரிகிறது.

மார்ச் மாதத்தில் பிரிக்ஸ் (பிரேசில் - ரஷ்யா - இந்தியா - சீனா - தென்னாபிரிக்கா) அமைத்த 'புதிய வளர்ச்சி வங்கியில்' எகிப்து இணைந்தது. இந்த ஓகஸ்ட் மாதம் கேப்டவுனில் நடைபெறும் உச்சி மாநாட்டில் புதிய உறுப்பினர்களைப் பற்றி விவாதிக்கும் குழுவுடன் இணையவும் அது ஆர்வமாக இருக்கிறது. அங்கு எகிப்து இந்தியாவின் ஆதரவைக் கோரும். வரலாற்று ரீதியான உறவுகளால் வலுப்பெற்று, இன்றைய புவிசார் அரசியல் பதற்றங்களால் அலைகழிக்கப்பட்டிருக்கும் நிலையில், இந்தியாவும் எகிப்தும் இப்போது இன்னும் நெருக்கமான உறவை நோக்கி நகர்கின்றன என்பது தெளிவு.

அடுத்ததாக பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்க உத்தியோகபூர்வ பயணத்தை வரலாற்று நிகழ்வு என்று கூறுவதில் எள்ளளவும் மிகையில்லை. சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்று, ஏராளமான ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டு, இதுவரை ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த இந்தியாவுக்கு சம அந்தஸ்து வழங்கி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை வழியனுப்பி இருக்கிறது அமெரிக்கா.

கடல், நிலம், வானம் மூன்றிலும் தொடர்புடைய பல ஒப்பந்தங்களில் இரு நாடுகளின் கூட்டுறவு உறுதிப்பட்டிருக்கிறது. இது நாள்வரை இந்தியாவுக்கு உலக நாடுகளால் மறுக்கப்பட்டு வந்த பல தொழில்நுட்பங்கள், இனிமேல் தடையில்லாமல் வழங்கப்படும் என்பதுதான் பிரதமர் மோடியின் அமெரிக்க விஜயத்தின் மிகப் பெரிய வெற்றி.

போர் விமானங்களின் எஞ்சின் தயாரிப்புக்காக, அமெரிக்க ஜெனரல் எலக்ட்ரிக் நிறுவனத்துடன் இந்தியாவின் அரசு நிறுவனமான 'ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிகல்ஸ்' மேற்கொள்ளவிருக்கும் தொழில்நுட்பக் கூட்டுறவு குறிப்பிடத்தக்கது. ஜெட் எஞ்சின் தொழில்நுட்பம் என்பது இரகசியமாகப் பாதுகாக்கப்படுவது. அமெரிக்காவைத் தவிர, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளிடம் மட்டும்தான் அந்த தொழில்நுட்பம் இருக்கிறது. இந்த ஒப்பந்தத்தின் மூலம், அமெரிக்கா தனது தொழில்நுட்ப இரகசியங்களை இந்தியாவுக்குத் திறந்துவிடத் தயாராகிறது என்பது புரிகிறது.

க்வாண்டம் கம்ப்யூட்டிங், செயற்கை நுண்ணறிவு, விண்வெளி ஆய்வு, பாதுகாப்பு, ரோபோட்டிக்ஸ், 5ஜி, 6ஜி தொழில்நுட்பங்கள் என்று ஏராளமான துறைகளில் இந்தியாவும் அமெரிக்காவும் செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தங்கள், உலக நாடுகளை வாய்பிளக்கச் செய்திருக்கின்றன. தனது இராணுவக் கூட்டணியில் இணையாத எந்த ஒரு நாட்டுடனும் இதுபோன்ற ஒப்பந்தங்களை அமெரிக்கா மேற்கொண்டதில்லை. அப்படியொரு உறவை ஏற்படுத்திக் கொள்ளாமல், அமெரிக்காவிடமிருந்து அந்தத் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றிருப்பதுதான் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் சாதனை.

பிரதமர் மோடியின் அந்த வெற்றிக்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அமெரிக்க நாடாளுமன்றக் கூட்டத்தில் அவர் குறிப்பிட்டதுபோல, ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் அவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது உலகின் பத்தாவது பொருளாதாரமாக இருந்த இந்தியா, இப்போது ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக உயர்ந்திருக்கிறது. விரைவில் மூன்றாவது பொருளாதாரமாக மாறும் என்று நம்பிக்கையுடன் பிரதமர் சொன்னபோது, அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைதட்டி ஆமோதித்தனர்.

சீனாவைக் கட்டுக்குள் வைக்கவும், அதற்குப் போட்டியாக ஆசியாவில் இன்னொரு சக்தியை உருவாக்கவும் அமெரிக்காவுக்கு இந்தியா தேவைப்படுகிறது. அமெரிக்க நிறுவனங்களின் உதவியுடன்தான் சீனா தனது தொழில்நுட்பத்தை மேம்படுத்தி மிகப் பெரிய உற்பத்திக் கேந்திரமாக மாறியது.

அமெரிக்காவைப் போலவே, இந்தியாவிற்கும் அமெரிக்காவின் உதவி தேவைப்படுகிறது. ரஷ்யாவின் பழைய தொழில்நுட்பம், உக்ரைனில் தோல்வி அடைந்திருக்கிறது. மேலை நாடுகளின் பொருளாதாரத் தடைக்குப் பிறகு, ரஷ்யா சமீப காலமாக சீனாவைச் சார்ந்து இயங்குகிறது. இந்த நிலையில், இந்தியா மீது சீனாவின் தாக்குதல் நடந்தால், நடுநிலை வகிக்குமே தவிர, இந்தியாவுக்கு உதவ ரஷ்யா முன்வராது. அப்படிப்பட்ட சூழலில், நம்பகமான கூட்டாளியாக இந்தியா அமெரிக்காவைத் தேர்ந்தெடுத்திருப்பதில் வியப்பில்லை. அதன் மூலம், இந்தியா தனது இராணுவத்தையும், பொருளாதாரத்தையும், தொழில்நுட்ப மேம்பாட்டையும் உறுதிப்படுத்த முற்பட்டிருக்கிறது.

தனது ரஷ்ய உறவைத் துண்டித்துக் கொள்ளாமல், அதே நேரத்தில் அதன் எதிரியான அமெரிக்காவுடன் கைகுலுக்கும் பிரதமர் நரேந்திர மோடியின் இராஜதந்திர நகர்வு பலரால் வரவேற்கப் பட்டுள்ளது. எகிப்திலும் மோடி நடந்துகொண்டவிதம் இஸ்லாமியர்கள் தொடர்பான அவரின் பார்வையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதையே காட்டுகிறது.

# நாடகமா? நிஜமா?

ரஷ்ய ஜனாதிபதி புட்டின் மட்டுமல்ல, ஒட்டுமொத்த உலகமும் 36 மணிநேரம் பேரதிர்ச்சியில் உறைந்தது. திடீரென்று ரஷ்யாவின் இராணுவத் தலைமைக்கு எதிராக, அந்த நாட்டின் துணை இராணுவப் படையான வாக்னர் குழு ஆயுதக் கிளர்ச்சியைத் தொடங்கும் என்று யார்தான் எதிர்பார்த்திருக்க முடியும்?

ஆயுதக் கிளர்ச்சியைத் தொடங்கியது மட்டுமல்ல, எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் வாக்னர் படையினரை மாஸ்கோ நோக்கி முன்னேற ரஷ்ய இராணுவம் அனுமதித்ததுதான் அதைவிட வியப்பாக இருக்கிறது.

தொலைக்காட்சியில் மக்களுக்கு அளித்த உரையில், வாக்னர் படையின் திடீர்த் தாக்குதலை 1917 ரஷ்யப் புரட்சியுடன் ஜனாதிபதி புட்டின் ஒப்பிட்டபோது, அவர் நிச்சயமாக பயந்திருக்கிறார் என்பது வெளிப்பட்டது.

வாக்னர் படைகளுக்கு ஏன் எந்தவித எதிர்ப்பும் இருக்கவில்லை என்பதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. உக்ரைனின் பாக்முத், சோலெதர் ஆகிய நகரங்களை வென்றெடுத்த வாக்னர் படைகளின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தித் தடுக்க ரஷ்யப் படையினர் தயங்கினார்கள் என்று கூறப்படுகிறது.

அதுமட்டுமல்ல, வாக்னர் படையினர் உக்ரைன் போர் தொடர்பாக ரஷ்ய இராணுவத் தலைமை மீது எழுப்பியிருக்கும் சந்தேகங்களும் குற்றச்சாட்டுகளும் ரஷ்ய இராணுவத்தினருக்கும் இருப்பதும் கூடக் காரணமாக இருக்கலாம். வாக்னர் குழுவின் தலைவர் யெவ்கெனி ப்ரிகோஷினின் குற்றச்சாட்டுகளில் நியாயம் இருப்பதாக அவர்கள் கருதியிருக்கலாம். தனது எதிர்ப்பு ரஷ்யாவின் இராணுவ அமைச்சகத்துக்கு எதிரானதுதான் என்றும், ரஷ்யாவின் அரசியல் தலைமைக்கு (அதிபர் புட்டினுக்கு) எதிரானதல்ல என்றும் ப்ரிகோஷின் குறிப்பிட்டிருப்பது கவனத்துக்குரியது.

முதலில், வாக்னர் படைகள் என்பது என்ன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதைத் துணை இராணுவம் என்று பொதுவாக அழைத்தாலும், அது உண்மையில், ரஷ்ய ஜனாதிபதி புட்டினால் உருவாக்கப்பட்ட கூலிப்படை என்பதுதான் நிஜம். சோவியத் யூனியனின் சர்வாதிகாரி ஜோசப் ஸ்டாலினுக்குப் பிறகு, மிக அதிக ஆண்டுகள் - கடந்த 23 ஆண்டுகளாக - ரஷ்யாவை இரும்புக்கரம் கொண்டு ஆள்பவர், முன்னாள் உளவுத்துறை ஏஜெண்டாக இருந்த ரஷ்ய ஜனாதிபதி புட்டின். ரஷ்ய இராணுவம் தனக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வதைத் தடுக்க, அதற்கு நிகராக ஒரு தனியார் இராணுவ அமைப்பை - கூலிப்படையை - உருவாக்க முற்பட்டார் அவர்.

கூலிப்படை என்பது சட்டவிரோதம் என்பதால், தனியார் இராணுவ நிறுவனமாக 2014இல் வாக்னர் படை பதிவுசெய்யப்பட்டது. வெறும் 250 பேர்களுடன் தொடங்கப்பட்ட வாக்னர் படையின் இன்றைய பலம் அரை இலட்சம் வீரர்களுக்கும் அதிகம். அவர்களில் பெரும்பாலானோர் சிறைக் கைதிகளாக இருந்தவர்களும், கிரிமினல்களும் ஆவர்.

நேரடியாக ரஷ்யா தலையிட முடியாத பிரச்சினைகளில், ஜனாதிபதி புட்டினின் கண்ணசைவுக்கு ஏற்ப வாக்னர் படைகள் அந்தப் பணியைச் செய்து முடிக்கும். ரஷ்யா மீது போர்க்குற்றம் சுமத்த முடியாது.

2014இல் உக்ரைனிலிருந்து கிரீமியாவை ஆக்கிரமித்துப் பிடித்ததிலும், பாக்முத்தில் நடந்த மோதலிலும் ரஷ்ய இராணுவத்துக்குப் பக்கபலமாக வாக்னர் படைகள் செயற்பட்டன. சிரியாவிலும் லிபியாவிலும் சமீபத்தில் சூடானிலும் ஏனைய ஆபிரிக்க நாடுகளிலும் ரஷ்யாவின் மறைமுக ஆதரவுடன் வாக்னர் தனியார் படை களமிறங்கியது. அங்கெல்லாம் கொலை, பாலியல் வன்கொடுமை, மனித உரிமை மீறல் குற்றங்கள் அதன் மீது சுமத்தப்பட்டிருக்கின்றன. தனியார் படை என்பதால் சர்வதேச அமைப்புகளால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

வாக்னர் படைகள் கைப்பற்றிய, ரஷ்ய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த இடங்களில் எல்லாம் மக்கள் "வாக்னர், வாக்னர்'' என்று அவர்களை ஆரவார கோஷமிட்டு வரவேற்றனர். அவர்களுடன் கைகுலுக்கவும், 'செல்பி' எடுத்துக் கொள்ளவும் மக்கள் ஆர்வம் காட்டினர். இராணுவத்தினரே கூட அவர்களை வேடிக்கை பார்த்தனர். ரஷ்ய மக்களும், ரஷ்ய இராணுவமும் ஜனாதிபதி புட்டினின் நீண்டுகொண்டே போகும் உக்ரைன் படையெடுப்பால் சலிப்படைந்திருப்பதன் வெளிப்பாடுதான் இவை.

பாக்முத் போரின்போதே, ப்ரிகோஷின் ரஷ்ய இராணுவத் தலைமை மீது குற்றஞ்சாட்டத் தொடங்கிவிட்டார். வாக்னர் படைகளுக்குப் போதிய ஆயுதங்களைத் தராமல் தடுப்பதாகவும், அவர்கள் மீது ரஷ்ய ஹெலிகொப்டர்கள் தாக்குதல் நடத்தி பலரைக் கொன்றதாகவும் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார். பாதுகாப்புத்துறை அமைச்சர் செர்கெய் ஷோய்குவும், இராணுவத் தளபதி வேலரி தெரசிமோவும் அகற்றப்பட வேண்டும் என்று வெளிப்படையாகத் தெரிவித்தார்.

36 மணிநேரம் ரஷ்யாவை பதற்றத்தில் வைத்திருந்த யெவ்கெனி ப்ரிகோஷினும் அவரது வாக்னர் படையினரும், ஜனாதிபதி புட்டினின் கைப்பாவையான பெலாரஸ் ஜனாதிபதி அலெக்ஸாண்டர் லுகஷென்கோவின் தலையீட்டால், தங்களது புரட்சியைக் கைவிட்டனர். அதுவும் ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவை நெருங்க வெறும் 200 கி.மீ. தூரம் மட்டுமே இருக்கும் நிலையில்...

தனது இராணுவத் தலைமையைக் கட்டுக்குள் வைத்திருக்க ஜனாதிபதி புட்டின் நடத்திய நாடகமா, இல்லை ஜனாதிபதி புட்டினின் மீது ரஷ்யாவில் ஏற்பட்டிருக்கும் பரவலான அதிருப்தியின் வெளிப்பாடா என்பதை இப்போதே சொல்ல முடியவில்லை. ஒரு துளி இரத்தம் சிந்தாமல், துப்பாக்கி ரவைகள் வீணாகாமல் இராணுவப் புரட்சி நாடகம் அரங்கேறி, அடங்கி இருக்கிறது. முழு உண்மையும் வெளிவரும்வரை, இப்போதைக்கு இடைவேளை!

(நன்றி - தினமணி)

# தில்லை அண்ணருக்கு அகவை73

எஸ்.எம்.வரதராஜன்

ஊடகத்துறையில் பொன்விழா கண்டு இன்னும் தனது ஊடகப்பயணத்தைத் தொடரும் தில்லைநாதன் எழுபதுகளைத் தாண்டி எழுபத்தி நான்காவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளார்.

ஊடகத்துறையில் தமது பதினெட்டாவது வயதில் பேனாவைப் பிடித்தவர் அவர். சுமார் பதினெட்டுக்கும் மேற்பட்ட ஊடகப்பெரும் ஆளுமைகளுடன் பணியாற்றியவர் அவர்.

கே.ஜி.மகாதேவா, கோபு, பெருமாள் சசி பாரதி, சிவப்பிரகாசம், நடராஜா, டேவிட் ராஜு, பொன். ராஜகோபால், சிவநேசச்செல்வன், சிவகுருநாதன், தில்லைநாதன், திருச்செல்வம், சிவநாயகம், இரத்தினசிங்கம், கான மயில்நாதன், தனபாலசிங்கம், பாமா ராஜகோபால், குகநாதன், தேவராஜ், காசி நவரத்தினம், செல்வராஜா என்று அது நீளும்.



1968இல் கண்டியிலிருந்து வெளிவந்த 'செய்தி' இதழின் யாழ். மாவட்ட நிருபராக இதழியல் துறையில் இணைந்த இவர் 1969இல் ஈழநாடு இதழின் நெல்லியடி நிருபராக நியமனம் பெற்றார்.

'செய்தி' பத்திரிகையின் ஆசிரியரா கவிருந்தவர் அமரர் கே.ஜி.மகாதேவா. இலங்கையில் ஊடகவரலாற்றில் 'செய்தி' பத்திரிகை அதன் உருவாக்கத்தில் பல ஆளுமைகளின் கரங்கள் பதிந்த ஒன்று.

பெரி சுந்தரம் என்ற மூத்த ஊடகர் இப்பத்திரிகையின் ஆசிரியராக இருந்தபோது அதன் பிராந்தியப் பத்திரிகையாளராகப் பணியாற்றியவர் தில்லைநாதன். இந்த இதழை உருவாக்கியவர் பேராசிரியர் அமரர் சோ.சந்திரசேகரனின் மாமனாராகிய ரா.மு.நாகலிங்கம் என்பது இங்கு குறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

மூத்த ஒலிபரப்பாளர் அமரர் சானா 'செய்தி'க்கு ஓவியங்கள் வரைந்தவர். அமரர்கள் எஸ்.பெருமாள், ஜோர்ஜ் சந்திரசேகரன், அன்ரன் பாலசிங்கம், தெளிவத்தை ஜோசப் எனப் பலருடைய ஆக்கங்கள் இடம்பெற்ற இதழ் 'செய்தி' இதழாகும்.

இத்தகைய 'செய்தி' இதழில் தமது ஆரம்ப ஊடகப்பணியைத் தொடங்கிய ஒருவருடன் வாழ்வது இன்றைய ஊடகர்களுக்குப் பெருமை தரும் செய்தியாகும்.

1972இல் 'வீரகேசரி'யில் புலோலி நிருபராகவும், 'தினகரன்' இல் உடுப்பிட்டி நிருபராகவும் இணைந்த தில்லைநாதன் தமிழர் ஐக்கிய முன்னணியின் தோற்றம், இலங்கை அரசின் இரண்டாவது குடியரசு அரசமைப்பாலும் பல்கலைக்கழகத் தரப்படுத்தலாலும் வடக்கிற்கு வந்த அமைச்சர்களுக்கு இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், ஹர்த்தால்கள் போன்றவற்றின் காலத்துச் செய்திகளின் உறவினர்.

துவிச்சக்கரவண்டியை தமது போக்குவரத்து வளமாக்கிக் கொண்டு பருத்தித்துறை நீதிமன்றம் முதல் அரசியல் மேடைகள் என வடமராட்சிப் பகுதிச் செய்திகளை இலங்கை முழுவதும் வாழ்ந்த வாசகர்களுக்கு அன்றாடம் தவறாமல் வழங்கிவந்தவர் தில்லை அண்ணர்.

1974இல் 'தினபதி' அச்சுவேலி நிருபராகவும் பின்னர் பருத்தித்துறை நிருபராகவும் பணியாற்றியுள்ளார். இவருக்கு முன்னர் அச்சுவேலி நிருபராகப் பணியாற்றியவர் வில்லிசைக் கலைஞர் சின்னமணி கணபதிப்பிள்ளை என்பதும் இங்கு குறிக்கத்தக்கது

1977 முதல் தனியே வீரகேசரிக்கு மட்டும் செய்தி அனுப்பவேண்டிய நிர்வாக ஒழுங்குமுறையில் அதன் புலோலி நிருபராக மட்டும் கடமையாற்றினார்.

வடக்கில் அக்காலத்தில் பிரபலம் பெற்ற கமலம் கொலைவழக்கு, கம்பர் மலை முக்கொலை வழக்கு போன்றனவற்றை 'வீரகேசரி'க்கு செய்தியாக வழங்கியவர்

குட்டிமணி, தங்கதுரை ஆகியோர் மணற்காட்டில் வைத்துக் கைதுசெய்யப்பட்டபோது அவர்களது விபரம் பின்னர் தான் தெரியவந்ததால் அந்த விபரத்தை உடனும் அறிவித்து அச்சு ஏற்றப்பட்டு பத்தாயிரம் பிரதிகள் அடிக்கப்பட்டிருந்த 'வீரகேசரி'யை நிறுத்தி பெயர் விபரங்களுடன் அச்சடிக்கப்பட்ட அனுபவம் தில்லை அண்ணரின் அனுபவங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

ஊடக நிறுவனத்தில் பணியாற்றும் ஊடகர்கள் அதன்மீது எவ்வளவு பற்றும் பொறுப்புணர்வும் கொண்டுள்ளார்கள் என்பது அன்றுதொட்டு இன்றும் நீண்டது என்பதை இந்தச் சம்பவம் இன்றைய ஊடகங்களுக்கும் உணர்த்தும் ஒன்றாகும்.

1983க்குப் பின்னர் 'வீரகேசரி'யுடன் 'தினகரனுக்கு' மீண்டும் அதன் அச்சுவேலி நிருபராகவும் பின்னர் நல்லூர் நிருபராகவும் பணியாற்றியிருந்தார்.

தொண்டமானாறு நூலக படுகொலை, செல்வச் சந்நிதி தேர் எரிப்பு வடமராட்சி லிபரேஷன் ஒப்பரேஷன் என்பவற்றினூடாக தமது ஊடகப் பயணத்தைக் கடந்தவர் அவர்.

1997 முதல் 2009 வரை யாழ். நிருபராகப் பணியாற்றிய தில்லை கிருஷாந்தி கொலைவழக்கு விசாரணை, யாழ். உள்ளூராட்சித்தேர்தல்,பொங்குதமிழ் நிகழ்வுகள் என்பவற்றின் நிருபராகப் பணியாற்றியவர்.

1985இல் 'உதயன்' நாளிதழ் யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பெற்றபோது அதன் நிருபராக 2001 வரை பணியாற்றியுள்ளார். போர்க்காலச் சூழ்நிலையில் பருத்தித்துறையிலிருந்து வல்லை வெளி தாண்டி துவிச்சக்கரவண்டியில் சென்று 'உதயன்' அலுவலகத்தில் செய்தி கொடுத்த அனுபவங்களை ஓர் ஊடகனின் ஊரடங்குப் பயணமாக எழுதலாம். இலங்கை வானொலியின் பருத்தித்துறை நிருபராக 1981இல் இணைந்த அவர் மின்னூடகங்களில் பண்பலை வானொலி நிருபராக (சூரியன் எப்.எம்.) நியமனம் பெற்றார். சூரியனின் செய்தி ஆசிரியர் காசி நவரத்தினம் எனது சகோதரர் ரூபனை யாழ். நிருபராகவும் இவரை பருத்தித்துறை நிருபராகவும் பணியாற்றும்படி கேட்டு நியமித்திருந்தார். 1999 முதல் சக்தி எப்.எம்மின் நிருபராக அதன் செய்தி ஆசிரியர் செல்வராஜாவின் வேண்டுகோளின் பேரில் நிருபரானார்.

தில்லைநாதன் அண்ணர் பற்றி நான் குறிப்பிடவேண்டிய சிறு குறிப்புடன் அவரை வாழ்த்துவது எனது கடமையாகிறது. இளம் ஊடகர்களை ஊக்குவித்து உற்சாகமளிக்கும் பண்பு தில்லை அண்ணருக்குரியது பொருத்தமான ஆலோசனைகளை அவர் தக்க நேரங்களில் தயக்கமின்றி வழங்குவார்.

நான் ஊரில் தினபதி, சிந்தாமணி, ஈழநாடு இதழ்களின் நிருபராகவிருந்த காலத்தில் புலோலியிலிருந்து அடிக்கடி எனது வீட்டுக்கு வருவார். குறிப்பாக நெல்லியடி, கரவெட்டி, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில் முக்கியமான சம்பவங்கள் ஏதும் இடம்பெற்றால் என்னுடன் சேர்ந்து போக அவர் வருவது வழக்கம். எனது தமையனார் அமரர் சுபேந்திரன் காலத்திலிருந்தே இந்தப்பழக்கமிருந்தது

எனக்கு அடிக்கடி ஆலோசனை சொல்லும் ஊடகர்களாக தில்லை அண்ணரையும், தினகரன் ஈழநாடு ஆகியவற்றின் பருத்தித்துறை நிருபரான திருச்செல்வம் அண்ணரையும் நான் இந்த நாளில் குறிப்பிடவேண்டும். புலோலிக்குப் போனால் நான் அந்த இருவரையும் சந்திப்பதும் செய்திகள் பரிமாறுவதும் அந்தப் பொன்னான ஊடக நாள்களின் அழகு என்பேன். கம்பர்மலையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. தலைவர் சிவசிதம்பரம் அதில் கலந்துகொண்டார். மாவட்ட அபிவிருத்திச் சபைகள் பற்றிய கதைகள் வெளிவந்தபோது அந்தக்கூட்டம் நடைபெற்றதால் தலைவர் சிவா பகிடியாக ஒரு கதை சொன்னார். அது 'தினபதி'க்கு உகந்த செய்தியாக எழுதக்கூடியது. கூட்டம் முடிந்ததும் தில்லைநாதன் அண்ணர் என்னிடம் தலைவர் சிவா சொன்ன விடயத்தை அவரிடம் கேட்டுவிட்டுப் போடும்படி சொன்னார். நான் அவர் சொன்னது போலவே தலைவர் சிவாவிடம் கேட்டு அவர் சம்மதத்துடன் அதனை அனுப்பினேன்.

1984இல் தொண்டைமானாறு சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தின்போது அங்கு சென்று செய்தி விபரத்தை அறிய அப்போது ஊடகத்துறைக்குப் புதியவனான நான் நெல்லியடியிலிருந்து புறப்பட முயன்றபோது ''அப்படியெல்லாம் அங்கு போய்ச் செய்தி எடுக்கவேண்டும் என்று அவசியமில்லை. நாங்கள் அறிந்தவற்றை மட்டும் கொடுப்போம். பாதுகாப்புப்படையினர் சொல்வதை வைத்து 'லங்காபுவத்' செய்தி நிறுவனம் கொடுப்பதையே எப்படியும் அவர்கள் போடுவார்கள். இப்படி எல்லாம் அவசரப்படாதேயும்'' என்று அக்காலத்தில் எனக்கு ஆலோசனை வழங்கியவர் அவர்.

இவ்வளவு ஆண்டுகளிலும் அவர் இப்படி எத்தனை சவால்களை எதிர்கொண்டு தமது ஊடகப் பொன்விழாவைத் தாண்டியுள்ளார் என்பது ஊடகத்துறையைச் சேர்ந்த அனைவரும் பெருமை கொள்ளவேண்டிய ஒன்றே என அவரது இந்த அகவையில் நினைந்து அவரை வாழ்த்துவோமாக..

## இன்றைய நாளில்...

- 1905 – சிறப்புச் சார்புக் கோட்பாட்டை அறிமுகப்படுத்தும் ஐன்ஸ்டீனின் இயங்கும் பொருட்களின் மின்னியக்கவியல் ஆய்வுக்கட்டுரை வெளிவந்தது.
- 1910 – இலங்கையில் ஐந்து சத செப்பு நாணயம் பயன்பாட்டிலிருந்து விலக்கப்பட்டது.
- 1937 – உலகின் முதலாவது அவசரத் தொலைபேசி எண் (999) லண்டனில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1971 – சோவியத்தின் சோயுஸ்-11 விண்கலத்தில் ஏற்பட்ட காற்றுக் கசிவினால் விண்வெளி வீரர்கள் மூவர் உயிரிழந்தனர்.
- 1997 – முதலாவது ஹரி பொட்டர் நூல் வெளியிடப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

கடன் மறுசீரமைப்பினால் வங்கிகள், ஈ.பி.எவ் பாதிக்கப்படமாட்டாதெண்டு ரணில் ஐயா சொல்லுறார் இப்பத்தான் லேசா பயம் வருது பாருங்கோ..



# வவுனியாவில் இடம்பெற்ற ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை




வவுனியா நிருபர்

வவுனியா தவ்ஹீத் ஜும்மாப் பள்ளிவாசலினால் ஏற்பாடு செய்யப்பட்ட புனித ஹஜ்ஜுப் பெருநாள் திடல் தொழுகை பட்டாணிச்சூர் 5 ஆம் ஒழுங்கை குடா வயல் திடலில் நேற்றுக் காலை (29.06) இடம்பெற்றது.

முஸ்லிம்களின் தியாகத் திருநாளான புனித ஹஜ்ஜுப் பெருநாள் நாடு பூராகவும் கொண்டாடப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் வவுனியாவிலும் முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளில் விசேட தொழுகைகளுடன் கொண்டாட்டம் இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில், வவுனியா தவ்ஹீத் ஜும்மாப் பள்ளிவாசலினால் ஏற்பாடு செய்யப்பட்ட புனித ஹஜ்ஜுப் பெருநாள் திடல் தொழுகை ஜமாத்தின் தலைவர் அஷ்ஷேய்க் ஸாதிகீன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது. இதில் பலரும் கலந்து கொண்டு தொழுகையில் ஈடுபட்டதுடன் வாழத்துகளையும் பரிமாறிக்கொண்டனர்.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

# முன்னாள் ஜனாதிபதி மைத்திரி யாழில் கலந்துரையாடல்




முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ். ஆயர் மற்றும் நாக விகாராதிபதியை மரியாதை நிமித்தமாக சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன நேற்று (29) காலை யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசத்தை ஆயர் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஆரியகுளம் நாகவிகாரைக்குச் சென்ற மைத்திரிபால சிறிசேன வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் நாக விகாராதிபதியையும் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன, மைத்திரிபால சிறிசேனவின் புதல்வர் தஹாம் சிறிசேன உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணத்திற்கு சென்றிருந்த மைத்திரிபால சிறிசேனா, நேற்று வியாழக்கிழமை(29) முதல் மூன்று நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பல்வேறு பொது நிகழ்வுகளிலும் சந்திப்புகளிலும் ஈடுபடவுள்ளார்.

# கடவுச்சீட்டு மோசடி தொடர்பில் வவுனியாவில் பிரதேச செயலக உத்தியோகத்தர் ஒருவர் கைது



கடவுச்சீட்டு மற்றும் அடையாள அட்டை மோசடி தொடர்பில் வவுனியா தெற்கு பிரதேச செயலக எழுதுவினைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மூவர் கைதுசெய்யப்பட்டு சந்தேகத்தின் பேரில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து இரு அரச உத்தியோகத்தர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கான அனுமதிப் பத்திரத்தை பரிசோதிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த அநுராதபுர பிரதேச செயலக உதவி முகாமையாளர் மற்றும் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலக எழுதுவினைஞர் ஆகியோர் கொழும்பு குற்றப்பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# ஜனாதிபதி சட்டத்தரணி சிற்றம்பலம் காலமானார்

வவுனியா



வவுனியாவின் சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி மு. சிற்றம்பலம் (28.06.2 023) சுகவீனம் காரணமாக காலமானார்.

முன்னாள் வவுனியா மாவட்ட சபைத் தலைவராகவும் பொது அமைப்புகளின் தலைவராகவும் பதவி வகித்த அன்னார் வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தில் நீண்டகாலமாகத் தலைவராக இருந்து வவுனியா மாவட்டத்திற்கு பல்வேறு உதவிகளைப் புரிந்தவர்.

பண்டாரவன்னியனின் சிலையை வவுனியா நகரில் நிறுவுவதற்கு அன்றைய வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் சிவசிதம்பரத்துடன் இணைந்து செயற்பட்ட இவர் கொலை அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் வவுனியா மண்ணில் இருந்து சட்டத்துறையில் சிறப்பாக செயற்பட்டவராவார்.

பல இளம் சட்டத்தரணிகளுக்கும் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் வழிகாட்டியாக இருந்த மு. சிற்றம்பலம் 80ஆவது வயதில் காலமானார்.

அன்னார் தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான மு. சிவசிதம்பரம் மற்றும் வவுனியாவின் பிரபல ஆசிரியர் மு. கந்தப்புவின் சகோதரராவார்.

# அறம் செயற்றிட்டத்தின் கீழ் வரணி மத்திய கல்லூரிக்கு உதவித்திட்டம்




சாவகச்சேரி நிருபர்

பிரித்தானிய பல்கலைக்கழக மாணவர் குழுவின் அறம் செயற்றிட்டத்தின் கீழ் 28/06 புதன்கிழமை தென்மராட்சி வரணி மத்திய கல்லூரிக்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையை பூர்வீகமாகக் கொண்டு பிரித்தானியாவில் பிறந்து அங்கு தமது பல்கலைக்கழகக் கல்வியைப் பயின்று வருகின்ற 20 மாணவர்கள் அடங்கிய குழுவே இவ்வாறு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு பல்வேறு உதவித்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

இந்நிலையில், வரணி மத்திய கல்லூரி மாணவர்களின் விளையாட்டுப் பயன்பாட்டிற்கென ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை அவர்கள் கையளித்ததுடன் பாடசாலை மாணவர்களுடன் கூடி விளையாடி மகிழ்ந்திருந்தனர்.

இது தொடர்பாக அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

நாம் பிரித்தானியாவில் பிறந்தாலும் தாய் நாடு மீதும் தாய் நாட்டு மக்கள் மீதும் கொண்டுள்ள அளவு கடந்த பற்றுக் காரணமாக இந்த செயற்பாட்டை முன்னெடுத்துள்ளோம்.

இம்முறை சிறுவர் இல்லங்கள்,பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் என 14 இடங்களுக்கு உதவி செய்துள்ளோம்.எமது உதவி எதிர்காலத்திலும் தொடரும் என அவர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் சார்ந்த முன்னுரிமை அஸ்வெசும திட்டத்தில் கூடாது

## வடிவேல் சுரேஷ் எம்.பி.தெரிவிப்பு



அரசாங்கத்தின் அஸ்வெசும நிவாரணப் பணியில் அரசியல் சார்ந்த முன்னுரிமைகள் இருக்கக்கூடாதென பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்நாட்டில் குறைந்த வருமானம் பெறுபவர்களாக ஐக்கிய நாடுகள் சபையிலும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் பெருந்தோட்ட மலையக மக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதிகூடிய வேலைப்பளுவைக் கொண்டபோதிலும், குறைந்த வருமானம் பெறும் சமூகமாக மலையக சமூகமே காணப்படுகின்றது

அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரணங்கள், நலன்புரி வேலைத் திட்டங்களிலும் மலையகமக்கள் கண்டிப்பாக உள்வாங்கப்பட வேண்டும் என்பதே என்னுடைய கோரிக்கையாக அமைந்திருந்தது.

அப்பாவி மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அஸ்வெசும வேலைத் திட்டத்தில் தகுதியற்ற பலர் உள்வாங்கப்பட்டுள்ளனர்.இது மரத்திலிருந்து விழுந்தவனை மாடு ஏறி மிதித்த செயற்பாடாகும்.மலையக மக்கள் பலர் தங்களுடைய ஆட்சேபனையை இவ்வேலைத் திட்டத்திற்கு எதிராக முன்வைத்திருக்கின்றார்கள்.

ஆகவே, அரச அதிகாரிகளும் கிராம உத்தியோகஸ்தர்களும் சமூர்த்தி உத்தியோகஸ்தர்களும் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள். எனவே, பொறுப்புடன் செயற்பட்டு தகுதி வாய்ந்த வறுமைக் கோட்டில் பின்தங்கியுள்ள மக்களுக்கு இவ்வேலைத்திட்டம் சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என நான் தெரிவித்துக்கொள்கின்றேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com




ஹட்டன் பள்ளிவாசலில் நேற்று ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை இடம்பெற்றது.

படப்பிடிப்பு: மனூர சுதத் செல்லஹேவா

# நானுஓயாவில் மாணவர் பாராளுமன்ற அமர்வு





செ.திவாகரன்

நுவரெலியா எபட்ஸ்போட் தமிழ் வித்தியாலய மாணவர் பாராளுமன்ற கன்னி அமர்வு புதன் கிழமை பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் செ.வில்வராஜ் தலைமையில் நடைபெற்றது.

இதில் விருந்தினர்களுக்கு மாலை அணிவித்து இசை வாத்தியங்கள் முழங்க விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டு கொடியேற்றல் வைபவத்தையடுத்து மங்களவிளக்கேற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பமானது.

மாணவர்களுக்கான தேர்தல் கடந்த மாதம் நடைபெற்றதுடன் இதன் முதலாவது அமர்வில் பிரதமர், பத்து அமைச்சர்கள் மற்றும் பத்து பிரதி அமைச்சர்கள், சபாநாயகர் டி . என்றினா தலைமையில் சத்தியப்பிரமாணம் செய்து அமைச்சுகளின் அறிமுகமும் முன்வைப்புகளும், சபாநாயகர் பாராளுமன்றத்தை நிறுவுதல் ஆகியன இடம்பெற்றிருந்தன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நுவரெலியா பரிசுத்த தேசிய கல்லூரியின் அதிபர் ரவிச்சந்திரன், ஓய்வு நிலை ஆசிரியரும் சமூக சேவையாளருமான பாலசுப்ரமணியம், ஆசிரிய வளவாளர்கள், பிரஜாசக்தி உத்தியோகத்தர்கள்அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர் பாராளுமன்ற சபாநாயகர், மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் பாடசாலையின் உப அதிபர் டி. கலைச்செல்வனின் வழிகாட்டலுக்கமைவாக சமூக, விஞ்ஞான பாட ஆசிரியர்களும் கலந்துகொண்டு ஏனைய ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் நிகழ்வு நடைபெற்றது.





கம்பளை அப்ரார் பள்ளிவாசலில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை நேற்று (29) இடம்பெற்றது.

படப்பிடிப்பு: கம்பளை செய்தியாளர்

# கலைஞர் பாலேந்திராவின் 50 ஆண்டு அரங்கப் பயணம்

## தமிழ்ச் சங்கத்தில் நாளை விசேட நிகழ்வு



ஈழத்து நாடகக் கலைஞர் பாலேந்திராவின் ஐம்பது ஆண்டு அரங்கப் பயணத்தை முன்னிட்டு விசேட நிகழ்வொன்று கொழும்பு தமிழ்ச் சங்க வினோதன் மண்டபத்தில் நாளை (01) மாலை 4.30 மணிக்கு உடுவை தில்லை நடராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் லண்டனில் இருந்து வருகை தந்துள்ள பாலேந்திரா ஆனந்தராணி ஆகியோர் தமது அரங்கப் பயணத்தின் நினைவுகளை மீட்டும் ஆற்றுகை நிகழ்வும் இடம்பெறும்.

பிரபல வானொலி, தொலைக்காட்சி ஊடகர் இளையதம்பி தயானந்தா அண்மையில் ஜீவநதி பதிப்பகம் வெளியிட்ட ஈழத்து தமிழ் நாடக வரலாற்றில் ஒரு முக்கியமான ஆவணமான பாலேந்திராவின் நேர்காணல்கள் தொகுப்பு நூலை அறிமுகப்படுத்தி சிறப்புரை ஆற்ற வுள்ளார்.

இங்கு வாழ்த்துரைகளும் இடம்பெறும். நாடகக் கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரும் இந்த நிகழ்வுக்கு அழைக்கப்படுகிறார்கள்.

அத்துடன், அண்மையில் கொழும்பில் வெளியீடு கண்டு பின்னர் கனடாவிலும் யாழ்ப்பாணத்திலும் அறிமுகப்படுத்தப்பட்ட "பாலேந்திராவின் அரங்கக் கட்டுரைகள்" நூலும் மற்றும் கண்ணாடி வார்ப்புகள், யுகதர்மம் ஆகிய பாலேந்திராவின் நூல்களும் அங்கு காட்சிப்படுத்தப்படும்.

"பாலேந்திரா நேர் காணல்கள்" இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் எழுத்து ஊடகங்களுக்காக எடுக்கப்பட்ட நேர்காணல்கள் இடம் பெற்றுள்ளன. 1979 இல் இருந்து 2015 வரையில் பாலேந்திரா மேற்கொண்ட அரங்கப் பயணத்தில் அவர் எதிர்கொண்ட சவால்களையும் சாதனைகளையும் அடக்கிய ஈழத்து நாடக வரலாற்றில் ஒரு முக்கியமான ஆவணத் தொகுப்பாக இந்த நூல் அமைந்துள்ளது.

ஈழத்தில் நாடகத் துறையில் பயணிக்கும் இளையவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இந்த இரு நூல்களும் அமைந்துள்ளன.

# யாழ். குடாக்கடல் இன்னும் பத்து வருடங்களில் சேற்றுக் கடலாக மாறும்

## சமூக செயற்பாட்டாளர் செல்வின் கவலை

யாழ். குடாக்கடலை பாரம்பரிய கடற்றொழிலில் இருந்து விலக்கி அட்டைப்பண்ணை தொழில் விஸ்தரிக்கப்படுவதால் இன்னும் பத்து வருடங்களில் குடாக் கடல் சேற்றுக் கடலாக மாறுவதை யாரும் தடுக்க முடியாது என சமூக செயற்பாட்டாளர் எஸ். செல்வின் கவலை தெரிவித்தார்.

உலக வங்கியால் வெளியிடப்பட்ட கடல் அட்டைப்பண்ணை தொடர்பில் கடற்றொழில் சங்கங்களுக்கு விழிப்புணர்வுக்கூட்டக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் குறிப்பாக, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள ஆழம் குறைந்த கடற்கரைகளில் எவ்வித பரந்துபட்ட ஆய்வுகளும் - திட்டமிடல்களுமின்றி கடல் அட்டைப்பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கடலட்டைப் பண்ணைகளால் கடல்வாழ் உணவுச் சங்கிலியில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ள நிலையில், இது கடல்வாழ் உயிரினங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு மட்டுமல்ல, ஒட்டுமொத்த உயிர்ப் பல்வகைமையிலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

வடக்கு மக்கள் மட்டுமின்றி, இலங்கையில் வாழும் மக்கள் கடல் அட்டையை உணவுத் தேவைக்காகப் பயன்படுத்தாத நிலையில், டொலரைப் பெறப் போகிறோம் எனக்கூறி வெளிநாடுகளுக்கு எமது பாரம்பரிய கடல் வளத்தை விற்க முடியாது.

அதுமட்டுமல்லாது, கடல் மேலாண்மைக்காக கட்டமைக்கப்பட்ட கடற்கரையோர மீனவ மக்களின் வாழ்க்கை முறையை அட்டைப் பண்ணை என்ற பெயரில் பல்தேசியக் கம்பெனிகளை வளர்ப்பதற்காக எமது மக்களையோ கடல் வளத்தையோ அழிக்க முடியாது. எமக்கு பொருத்தமற்ற கடல் அட்டைப் பண்ணைக்கான அட்டைக் குஞ்சுகளை யாரோ ஒரு வெளிநாட்டு சக்தியினருக்கு வழங்கிவரும் நிலையில், அறுவடை செய்யும் போது விலையையும் அவர்களே நிர்ணயம் செய்கிறார்கள்.சிலவேளை குஞ்சுகளை வழங்கியவர்கள் அறுவடை காலத்தில் அதனை ஏற்றுமதி செய்யாவிட்டால் பாதிக்கப்படுவது எமது மீனவர்களே.

40 நாள் கோழிக்குஞ்சை வளர்த்து முட்டை பெறமுடியாத எமது அரசாங்கம் சீனாவிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்யும் நிலையில்



பிளாஸ்ரிக் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டதாக பேசப்பட்டமை யாவரும் அறிந்ததே.

ஆகவே, எமது மக்கள் மரபுகளுக்கு உட்பட்டு அறங்களின்பால் மேற்கொள்ளும் கடற்றொழிலை வெளிநாட்டு சக்திகளுக்கும் பினாமி நிறுவனங்களின் தேவைக்காகவும் மாற்றும் முயற்சியை கைவிட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பேராதனைப் பல்கலை நாளை முதல் மக்கள் பார்வைக்காக திறந்து வைப்பு

கண்டி நிருபர்

பேராதனைப்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு 80 வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு நாளை (01) பொதுமக்கள் பார்வைக்காக பல்கலைக்கழகம் திறந்துவிடப்படவுள்ளது.

இயற்கை சுற்றாடலும், இயற்கை வனப்பும் நிறைந்த பாரிய நிலப்பரப்பில் அமைந்துள்ள இப்பல்கலைக்கழகம் தென்கிழக்காசியாவில் உள்ள பெரிய பல்கலைக்கழகங்களில் ஒன்றாக இருப்பதுடன், சர்வதேச ரீதியில் பேசப்பட்டு வரும் ஒரு பல்கலைக்கழகமாகவும் திகழ்கின்றது.

பல்வேறு வளங்களும் பல்வேறு பீடங்களும் அதற்கான கட்டடங்களும் ஒரே பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கையின் ஒரே பல்கலைக்கழகம் என்று கூறுமளவுக்கு அது வியாபித்துள்ளது. ஆசியாவில் உள்ள மிகப்பெரிய வாசிகசாலையும் இங்கேதான் அமைந்துள்ளது.

இதனை ஆரம்பித்து 80 வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு எதிர்வரும் ஜூலை முதலாம் திகதியை 'ஓபன்டே' எனக் குறிப்பிட்டு பொதுமக்கள் பார்வைக்காக திறந்துவிடப்படவுள்ளது என பல்கலைக்கழக பதில் உபவேந்தரும் ஊடக பேச்சாளருமான ட்ரஸ் மதுஜித் தெரிவித்தார்.




கொழும்பு மோச்சுவல் பிலாஷா ஸ்டார் (mutual plaza star) லயன்ஸ் கழக (District 306 B2) 2023-2024 கான புதிய செயற்குழு சத்தியப்பிரமாண நிகழ்வு அண்மையில் கொழும்பு சென்ஷென் ஹோட்டலில் நடைபெற்றது. பிரதம அதிதியாக தேசமான்ய லயன் சசிகுமார் சுப்பிரமணியம் PMJF.PMAFJP கலந்து கொண்டார். புதிய தலைவராக தேசமான்ய லயன் தர்மராஜா தவசீலன் MAF தீ தெரிவுசெய்யப்பட்டார்.



முஸ்லிம் மக்களின் புனித ஹஜ் ஜுப் பெருநாள் விஷேட தொழுகை நிகழ்வுகள் உடப்பு முகைதீன் ஜும்மா பள்ளிவாசலில் நேற்று (29) இடம்பெற்றன.

படப்பிடிப்பு: உடப்பு செய்தியாளர்



புனித ஹஜ்ஜூப் பெருநாள் தொழுகை நேற்று (29) கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது. இதன்போது மௌலவி ஏ.எம்.எம். ஹமீம் பெருநாள் குத்பா பிரசங்கத்தையும் தொழுகையையும் நடத்தினார்.

படப்பிடிப்பு: ஏ.எஸ்.எம்.ஜாவித்




# பறகஹதெனியாவில் ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை



இக்பால் அலி

குருநாகல், பறகஹதெனியாவில் அமைந்துள்ள ஜாமிஉத் ஜும்ஆப் பள்ளிவாசலின் ஏற்பாட்டில் ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை பறகஹதெனிய அரபுக் கல்லூரியின் மைதானத்தில் நேற்று (29) இடம்பெற்றது. இந்நிகழ்வில் பெருநாள் தொழுகையை மௌலவி சமீம் மதனியும் விசேட குத்பா பேருரையை மௌலவி எஸ். எச். எம். இஸ்மாயிலும் நிகழ்த்தினர்.

ஆயிரக்கணக்கான ஆண்,பெண் இருபாலாரும் கலந்து கொண்டு தொழுகையில் ஈடுபட்டனர்.



மஸ்கெலிய ஹனபி ஜும்மா பள்ளிவாசலிலும் ஈதுல் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை நிகழ்வுகள் நேற்று (29) சிறப்பாக இடம்பெற்றன.

படப்பிடிப்பு: மஸ்கெலியா நிருபர்

# பாஸிய்யா பெரிய ஜும்மா பள்ளிவாசலில் விமர்சையாக இடம்பெற்ற புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை

பீ.எம் முக்தார்

பேருவளை, சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்மா பள்ளிவாசலில் புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை நேற்று இடம்பெற்றது.

மேற்படி பள்ளிவாசல் கதீபும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான முகத்தமுஷ் ஷாதுலி அஷ் ஷெய்க் அல்ஹாஜ் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) பெருநாள் தொழுகையை நடத்தியதோடு குத்பா பிரசங்கமும் நிகழ்த்தினார்.

சீனன் கோட்டையின் பாரம்பரிய இஸ்லாமிய கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் சிவப்பு தொப்பியும் கோட் சீருடையும் அணிந்து பெருமளவிலானோர் பங்குபற்றியமை கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது.

சீனன் கோட்டையிலிருந்து இம்முறை சுமார் 230 பேர் வரையில் புனித ஹஜ் கடமைக்காக மக்கா சென்றுள்ளதோடு அவர்களின் தேகாரோக்கியத்திற்காகவும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜாக அமையவும் விஷேட துஆ பிரார்த்தனை நடத்தப்பட்டது. சீனன்கோட்டை வரலாற்றில் ஆகக் கூடுதலானோர் புனித ஹஜ் கடமையை மேற்கொள்வது



இதுவே முதற்றடவை என்பது விஷேட அம்சமாகும்.

அத்தோடு நாட்டில் இனங்களுக்கிடையே ஒற்றுமை, சமாதானம், சுபீட்சம் ஏற்பட வேண்டியும் துஆ பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சீனன்கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச்.எம் முக்தார் ஹாஜியார் ஜமாத்தார்கள் மத்தியில் சொற்பொழிவாற்றினார். பள்ளிச் சங்க இணைச் செயலாளர் எம்.எம்.எம் சிஹாப் ஹாஜியார் சீனன்கோட்டை தரகுப்பண வசூல் அறிக்கையை சமர்ப்பித்தார்.



பள்ளிவாசல் பிரதம இமாம் கலீபதுஷ் ஷாதுலி அல் ஹாஜ் மௌளவி ரபீக் (பஹ்ஜி) உட்பட உலமாக்கள் பள்ளிச்சங்க உறுப்பினர்கள் ஆயிரக் கணக்கான இஹ்வான்கள் இதில் கலந்துகொண்டனர். இறுதியில் ஒருவருக்கொருவர் முஸாபஹா செய்து ஈத் பெருநாள் வாழ்த்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

# கிழக்கில் இடம்பெற்ற ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை நிகழ்வுகள்




ஹஜ்ஜூப் பெருநாள் தொழுகையும் விசேட துஆ பிரார்த்தனையும் கிண்ணியா ஜெமியது உலமா சபையின் ஏற்பாட்டில் கிண்ணியா மத்திய கல்லூரி மைதானத்தில் வியாழக்கிழமை(29) இடம்பெற்றது.

**படம்:** *சீனக்குடா செய்தியாளர்*




மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையும் குத்பா பிரசங்கமும் வியாழக்கிழமை(29) இடம்பெற்றது. இதனை பள்ளிவாசல் பேஸ் இமாம் மௌலவி ஏ.எல்.எம்.மின்ஹாஜ் நிகழ்த்தினார். இதேவேளை, சாய்ந்தமருது அல்- அக்ஸா பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெருநாள் தொழுகையும் குத்பா பிரசங்கமும் சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. இதன்போது அல்- அக்ஸா பள்ளிவாசல் பேஸ் இமாம் மௌலவி ஏ.ஆர்.எம்.றியாஸ் (பஹ்மி) நிகழ்த்தினார்.

**படம்:** *மாளிகைக்காடு செய்தியாளர்*



ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை மூதூர் பொது விளையாட்டு மைதானத்தில் வியாழக்கிழமை(29) இடம்பெற்றது. மூதூர் அல் -ஹஸனாஹ் சமூக அபிவிருத்தி மையம் ஏற்பாடு செய்திருந்த இப்பெருநாள் தொழுகையை ஏ.ஆர்.லத்தீப் (ஸலாமி) நிகழ்த்தினார். ஹஜ்ஜுப் பெருநாள் ஜும்ஆப் பிரசங்கத்தை எஸ்.ஏ.பரூஸ் (நத்வி) நிகழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**படம்:** *மூதூர் செய்தியாளர்*




ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை மற்றும் குத்பா பிரசங்க நிகழ்வு பாலமுனை ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் வியாழக்கிழமை(29) இடம்பெற்றது.

**படம்:** *பாலமுனை செய்தியாளர்*




பாலமுனை றியாழுள் ஜன்னாஹ் ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை ஏற்பாடு செய்த புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை அல்-ஹிக்மா வித்தியாலய மைதானத்தில் வியாழக்கிழமை(29) இடம்பெற்றது. இதன்போது பாலமுனை சஹ்வா அரபுக் கல்லூரி அதிபர் அஷ்-ஷெய்க் ஏ.ஆர்.றமீன் (மதனி) குத்பா பிரசங்கம் நிகழ்த்தினார்.

**படம்:** *பொத்துவில் செய்தியாளர்*



பாலமுனை ஹைறமா பள்ளிவாசல் முன்றலில் வியாழக்கிழமை(29) இடம்பெற்ற ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை.

**படம்:** *பாலமுனை செய்தியாளர்*




திருகோணமலை - முள்ளிப்பொத்தானை ஈச்ச நகர் பொது விளையாட்டு மைதானத்தில் ஹஜ்ஜூப் பெருநாள் திடல் தொழுகை வியாழக்கிழமை(29) இடம்பெற்றது. முள்ளிப்பொத்தானை புஹாரி ஜூம்ஆப் பள்ளிவாசல் ஏற்பாடு செய்த குறித்த தொழுகை நிகழ்வில் பள்ளிவாசல் பேஷ்இமாம் விசேட பயான் உரை நிகழ்த்தினார்.

**படம்:** *கிண்ணியா செய்தியாளர்*




ஈதுல் அழ்ஹா தியாகத்திருநாளான புனித ஹஜ்ஜுப் பெருநாளையிட்டு விசேட கூட்டுத்தொழுகை மட்டக்களப்பு - ஏறாவூர் முகைதீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் ஹாபிழ் மௌலவி எம்.ஐ.நாஸர் இஹ்ஸானி தலைமையில் வியாழக்கிழமை(29) தொழுகை நடத்தப்பட்டது.

**படம்:** *ஏறாவூர் செய்தியாளர்*




புனித ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் வியாழக்கிழமை(29) நடைபெற்றது. இம்முறை கடற்கரை திறந்த வெளியில் இமாம் ஜமாத்தாக நடைபெற்ற ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். பெருநாள் தொழுகை மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற குத்பா பிரசங்கம் ஆகியவற்றை மௌலவி அஷ்-ஷெய்க் கலாநிதி எம்.எல்.முபாறக் (மதனி) நடத்தினார்.

**படம்:** *பாறுக் ஷிஹான், பெரியநீலாவணை, மருதமுனை, மருதமுனை மேலதிக செய்தியாளர்கள்*




வாழைச்சேனை மத்தி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட செம்மண்ணோடை அல்- ஹம்ரா வித்தியாலய மைதானத்தில் புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை வியாழக்கிழமை(29) இடம்பெற்றது. செம்மண்ணோடை குபா ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகம் ஏற்பாடு செய்த பெருநாள் தொழுகை மற்றும் குத்பா உரையினை கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரும் மார்க்க அறிஞருமான அஷ்-ஷெய்க் ஏ.எல்.பீர் முகம்மட் காஸிமி நடத்தினார்.

**படம்:** மீராவோடை செய்தியாளர்



சாய்ந்தமருது அல்- இஸ்லாஹ் ஜும்ஆப் பள்ளிவாசல் ஒழுங்கு செய்திருந்த ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை சாய்ந்தமருது கடற்கரை திடலில் வியாழக்கிழமை(29) இடம்பெற்றது.

**படம்:** *நிந்தவூர் செய்தியாளர்*




சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை வியாழக்கிழமை(29) இடம்பெற்றது. பள்ளிவாசல் பேஷ் இமாம் எம்.ஐ.ஆதம்பாவா ரஷாதியினால் தொழுகையும் துஆப் பிரார்த்தனையும் நிகழ்த்தப்பட்டது. ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை தலைவர் ஏ. ஹிபத்துல் கரீம், செயலாளர் ஐ.எல்.எம்.மன்சூர், பொருளாளர் ஏ.சலீம் உட்பட நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் உறுப்பினர்கள், ஜமாஅத்தார்கள், பெண்கள் உட்பட சிறுவர்களும் தொழுகையில் கலந்து கொண்டனர்.

**படம்:** *பொலிவேரியன் செய்தியாளர்*



புனித ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜூப் பெருநாள் தொழுகையும் ஜும்ஆப் பேருரை மற்றும் விசேட துஆப் பிரார்த்தனையும் தோப்பூர் ஹைராத் ஜும்ஆப் பள்ளியில் வியாழக்கிழமை (29) இடம்பெற்றது. ஜும்ஆ பேருரையினை அல்ஹாபிழ் மௌலவி தாஹீர் முகம்மட் ஹாபீஸ் (ரஹ்மானி) நிகழ்த்தினார்.

**படம்:** *தோப்பூர்*



புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை அல்-மர்க்கஸூல் இஸ்லாமி அமைப்பினரால் ஏறாவூர் அலிகார் தேசியக் கல்லூரி மைதானத்தில் வியாழக்கிழமை(29) இடம்பெற்றது.

**படம்:** *மட்டக்களப்பு செய்தியாளர்*

# தேசிய கடன் மறுசீரமைப்பு என்ற போர்வையில் சேமலாப நிதியத்தில் கைவைக்க முயற்சி

## சனியும் ஞாயிறும் தீர்க்கமான தினங்களென சுட்டிக்காட்டுகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

ஊழியர் சேமலாப நிதியத்தில் கைவைக்க போவதில்லை என்று அரசாங்கம் தொடர்ச்சியாக கூறிவந்தாலும், அந்த நிதியத்தில் கைவைப்பதற்கான சகல ஆயத்தங்களையும் அரசாங்கம் செய்துள்ளது. தேசிய கடன் மறுசீரமைப்பு என்ற போர்வையில் சேமலாப நிதியத்திலுள்ள நிதியை கைப்பற்ற அரசாங்கம் முயற்சிக்கிறது. எனவே, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களும் தீர்க்கமான முடிவு எடுக்கவேண்டிய நாட்களாகும். மக்களின் சார்பிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் செயலாற்ற வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தேசிய கடன் மறுசீரமைப்பின்போது, எதிர்க்கட்சி, மக்கள் சார்பில் சிந்தித்து இதற்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காக அடிப்படை தகவல்களை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இந்த செயன்முறைகள் தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர் எங்களுக்கு தெளிவுப்படுத்தல்களை



வழங்கியுள்ளார்.

குறிப்பாக ஊழியர் சேமலாப நிதியத்தில் தற்போது வரையில் அண்ணளவாக 25 இலட்சம் பேர் செயற்பாட்டில் இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அதாவது, தேசிய கடன் மறுசீரமைப்பு என்ற போர்வையில், நாட்டிலுள்ள மக்கள் தொகையில் அரச தொழிலில் ஈடுபடாமல் சுயமாக தனியார் துறையில் தொழில் புரிந்து தமக்காக சேமித்து வைத்துள்ள நிதியை இல்லாமலாக்கவே அரசாங்கம் முயற்சிக்கின்றது என்பதை அவரின் தெளிவுபடுத்தலில் புரிந்துக்கொண்டோம்.

எனவே, கடன் மறுசீரமைப்பினால் ஊழியர் சேமலாப நிதியில் எவ்வளவு தொகை பணம் இல்லாமல் போகுமென்று கூற முடியாது. இருந்தபோதும், ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியை தொடர்ந்து சேமலாப நிதியத்திலுள்ள நிதியில் மூன்றிலொரு பங்கு இல்லாமல் போயுள்ளது. அதற்கும் அப்பால் சென்று அரசாங்கத் தரப்பு பல்வேறு கருத்துகளை முன்வைக்கலாம்.

பாராளுமன்றத்திலும் மக்கள் சார்பாகவே கேள்வி எழுப்புகிறோம். மக்களால் புரிந்துக்கொள்ள முடியாத மொழியில் பல்வேறு விடயங்களை அவர்கள் முன்வைக்கலாம். வரி அறவிடப்போவதில்லை என்று கூறுவார்கள். 10 வருடங்களுக்கு நீடிக்கப்போவதாக கூறுவார்கள். ஆனால், தேசிய கடன் மறுசீரமைப்பு என்ற போர்வையில் ஊழியர் சேமலாப நிதியத்தை இல்லாமலாக்கவே ரணில் - பொதுஜன பெரமுன அரசாங்கம் முயற்சிக்கின்றது என்பதே இதன் உண்மை தன்மையாகும்.

குறிப்பாக, தொடர்ச்சியாக அரசாங்கம் ஊழியர் சேமலாப நிதியத்தில் கைவைக்க போவதில்லை என்றே குறிப்பிட்டு வந்தது. ஆனாலும், தற்போதுவரையில், அந்த நிதியத்தில் கைவைப்பதற்கான சகல செயற்பாடுகளும் ஆயத்த நிலையில் இருக்கின்றன. எனவே, மக்கள் தொடர்பில் சிந்தித்து சரியான முடிவை எடுக்கும் பொறுப்பு சகல மக்கள் பிரதிநிதிகளுக்கும் இருக்கிறது. நாளையும் நாளை மறுதினமும் மக்கள் சார்பில் சிந்தித்து முடிவெடுக்க வேண்டியது அவசியமாகும் என்றார்.

# பேராதனை வைத்தியசாலையில் ஐவர் மீது எசிட் வீச்சுத் தாக்குதல்

பேராதெனிய போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் நேற்று முன்தினம் (28) எசிட் வீச்சு சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

நபர் ஒருவர் தனது மனைவியின் காதலன் எனக் கூறப்படும் ஒருவர் மீது எசிட் வீச்சுத்தாக்குதல் நடத்தியுள்ளார். இதன்போதே ஐவர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் மனைவியின் காதலன் உள்ளிட்ட காயங்களுக்குள்ளான ஐவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பேராதெனிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் பேராதெனிய பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரின் மனைவியுடன் காதல் தொடர்பு பேணுபவர் எனக் குறிப்பிடப்படும் நபரொருவருக்கு இவ்வாறு எசிட் வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளமை பொலிஸாரின் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதன்போது, சிகிச்சைக்காக வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவுக்கு வந்திருந்த நோயாளர்கள் நால்வர் இந்த எசிட் வீச்சினால் காயங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த எசிட் வீச்சில் சந்தேகநபரின் மனைவியின் காதலன் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பேராதெனிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் விஜித்த விஜேகோன் தலைமையில் இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கப்படுகின்றன.

# காரில் பயணித்தவர் மீது துப்பாக்கிச் சூடு

காரில் பயணித்த நபரொருவர் மீது நேற்று முன்தினம் (28) துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உதயநகர் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இனம் தெரியாத நபர்களினால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது காரில் பயணித்த ஒருவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருநகர் பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய வசந்தகுமார் என்ற குடும்பஸ்தரே சம்பவத்தில் காயமடைந்துள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இரு குழுக்களுக்கிடையிலான மோதலின் பின்பே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

# பாணந்துறையில் கைதான போலி வைத்தியர் சரீரப் பிணையில் விடுதலை

போலி வைத்தியரொருவர் பாணந்துறை வலானை மத்திய ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை வடக்கு பொலிஸ் பிரிவிலுள்ள சமகி மாவத்தை, சரிகமுல்ல பிரதேசத்தில் கடந்த 27ஆம் திகதி பாணந்துறை வலான மத்திய ஊழல் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய தனியார் வைத்தியசாலையொன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

அதன்போது, இலங்கை மருத்துவ சபையின் அனுமதியின்றி, போலி ஆவணங்களை பயன்படுத்தி அரச வைத்தியரென கூறி நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கிய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவர் பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தெமடகொட வீதி, கொழும்பு 09 ஐச் சேர்ந்த 30 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைக்கு பாணந்துறை சுகாதார வைத்திய அலுவலக அதிகாரிகளின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர் நோயாளர்களுக்காக விநியோகிப்பதற்காக பயன்படுத்தி மருந்துகள், காலாவதியான மருந்துகள் உள்ளிட்ட மேலும் சில மருந்துகள் அதிகாரிகளினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை மேலதிக விசாரணைகளுக்காக களுத்துறை உணவு மற்றும் ஔடத ஒழுங்குப்படுத்தல் பிரதேச சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர் நேற்று முன்தினம் (28) பாணந்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில், அவர் 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி இதுதொடர்பான வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதுடன் பாணந்துறை வடக்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





**முந்தல் ஸ்ரீதிரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் தீமிதிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (28) இடம்பெற்றது. அக்கினிக் கரகத்தை சுமந்த வண்ணம் பூசகர் குழந்தைவேல் சுரேந்திரன் தமது முதற் பாதத்தை செந்தனலில் வைத்து தீமிதித்தார். அதனைத் தொடர்ந்து பக்தர்கள் ஒவ்வொருவராக தீமிதித்தனர்.**

**படப்பிடிப்பு:** உடப்பு செய்தியாளர்

# வவுனியா கல்வியியல் கல்லூரிக்கு திலீபன் எம்.பி. கண்காணிப்பு விஜயம்



வவுனியா நிருபர்

வவுனியா தேசிய கல்வியில் கல்லூரியில் நிலவும் வளப்பற்றாக்குறை உட்பட கல்லூரியின் பௌதீக வளங்களின் குறைபாடுகள் தொடர்பில் வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு. திலீபன் நேற்று (29) பார்வையிட்டார்.

தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி குணரட்ணம் கமலகுமார் தலைமையிலான குழுவினர் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருக்கு கல்லூரியில் நிலவும் குறைபாடுகளை சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதன்போது ஆசிரிய மாணவர்களின் வசதி கருதி அமைக்கப்பட்ட கட்டிடங்கள் பல கட்டிடத்திணைக்களத்தின் அசமந்தப்போக்கால் பல ஆண்டுகளாக நிறைவுறாது காணப்படுகின்றமை, கேட்போர் கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட தரமற்ற வேலைகள், சுற்றுமதிலின் ஒரு பகுதி அமைப்பதில் ஏற்படும் கால தாமதம், ஆசிரிய மாணவர் விடுதி பயன்படுத்த முடியாமல் காணப்படுகின்றமை



மற்றும் நீர்த்தாங்கி பிரச்சினை தொடர்பிலும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் சில திணைக்களத் தலைவர்களுடன் உடனடியாக தொலைபேசியில் தொடர்புகொண்டு காலதாமதமாகும் பணிகளை உடனடியாக செய்வதற்கு உத்தரவிட்டிருந்ததுடன், ஊழியர் பற்றாக்குறை மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளர்களை நிரந்தரமாக்குவது தொடர்பான விடயங்கள் தொடர்பில் எதிர்வரும் வாரங்களில் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இடம்பெறவுள்ள சந்திப்பில் இவ்விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதாகவும் தெரிவித்திருந்தார்.

# யாழில் இந்து மதகுருமார்களை சந்தித்த முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன



சாவகச்சேரி நிருபர்

யாழ்ப்பாணத்துக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, நேற்று (29) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் இந்து மத குருமார்களை சந்தித்து அவர்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்துக் கொண்டுள்ளார்.

இதன்போது சந்திப்பில் கலந்துகொண்ட மதகுருமார்கள் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சட்டவிரோத விகாரைகள், மதமாற்றல் பிரச்சினைகள்,



போதைவஸ்து உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தனர்.

குறித்த சந்திப்பில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட சுதந்திரக் கட்சியின் பிரமுகர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

# அகில இலங்கை ரீதியில் தங்கப்பதக்கம் வென்ற புளியாவத்தை ஹொன்சி கல்லூரி மாணவி

(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

அகில இலங்கை ரீதியில் விவேகானந்த சபையால் நடத்தப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான சைவசமயப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியாக அதியுயர் புள்ளியை பெற்று முதலாம் இடத்தை ஹொன்சி கல்லூரி மாணவி தங்கப்பதக்கம், பணப்பரிசுடன் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை விவேகானந்த சபை இம்மாணவியின் வெற்றிக்காக ரூபா 25ஆயிரம் பணப்பரிசோடு தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழும் வழங்கி கௌரவித்துள்ளனர்.

அகில இலங்கை ரீதியாக முதலிடம் பெற்று பாடசாலைக்கும் சமூகத்துக்கும்



பெருமை சேர்த்துள்ளதாக கல்லூரி அதிபர் வி.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட ஹட்டன் கல்வி வலயத்துக்குட்பட்ட புளியாவத்தை ஹொன்சி கல்லூரியில் தரம் 11இல் கல்வி கற்கும் சௌ.கவிஷாலினி முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

வருடந்தோறும் இலங்கை விவேகானந்த சபையால் நடத்தப்படும் விவேகானந்த சைவசமய பரீட்சை தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்கள் உட்பட முழு பாடசாலை சமூகமும் இம்மாணவிக்கு பாராட்டுகளைத் தெரிவிக்கின்றது.

# உயிர் அச்சுறுத்தல் விடுத்து கப்பம் கோரிய ஐவரடங்கிய குழு கைது

தொலைபேசியினூடாக உயிர் அச்சுறுத்தல் விடுத்து கப்பம் கோரியமை, அதற்கு உதவி புரிந்தமை தொடர்பில் சந்தேகநபர்கள் இருவரும் சந்தேகத்தின் பேரில் பெண்கள் மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கல்கிசை குற்ற புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தொலைபேசியினூடாக உயிர் அச்சுறுத்தல் விடுத்து கப்பமாக நிதி பெற்றுக்கொண்டமை தொடர்பில் கல்கிசை பொலிஸாருக்கு கிடைத்திருந்த 05 முறைப்பாடுகள் தொடர்பில் கல்கிசை குற்றப்புலனாய்வு அதிகாரிகளினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அந்த விசாரணைகளின் அடிப்படையிலேயே சந்தேகநபர்கள் ஐவரும் நேற்று முன்தினம் (28) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தங்காலை, காலி மற்றும் பெலிஹத்த ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 25, 33 மற்றும் 65 வயதுடைய பெண்கள் மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஏனைய இரு நபர்களும் சூரியவெவ மற்றும் கங்காலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இருவர்கள் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் ஐவரும், சிறையிலுள்ள திட்டமிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நபரொருவரின் வழிகாட்டலின் அடிப்படையில் இவ்வாறு கப்பம் கோரி பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நபர்களின் வங்கி கணக்குகளுக்கு நிதி வைப்பிலிடப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் ஐவரும் கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதுடன், கல்கிசை குற்றப் புலனாய்வு பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கதிர்காம ஆடி உற்சவத்தை முன்னிட்டு இரு நூல்கள் வெளியீடு







கதிர்காம ஆடி உற்சவத்தை முன்னிட்டு கதிர்காம திருக்கோயிலில் 'கதிர்காமம் முருகன் திருப்பல்லி எழுச்சி', 'ஓம் கதிர்காமம் முருகன் திருவடி போற்றி – 108' ஆகிய இரு நூல்களும் கதிர்காம முருகன் சந்நிதியில் வைத்து 'படையல் அர்ச்சனை' செய்யப்பட்டு எதிர்வரும் 03ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று வெளியிடப்படவுள்ளது.

இந்நூல்கள் இந்து சமய ஆலயங்களுக்கும் அறநெறி பாடசாலைகளுக்கும் இந்து சமய நிறுவனங்களுக்கும் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

'கதிர்காமம் முருகன் திருப்பள்ளியெழுச்சி' என்ற நூலை இலக்கியச் செம்மல் கலாபூசணம் கலைமாமணி மாத்தளை பெ.வடிவேலனும் 'ஓம் கதிர்காமம் முருகன் திருவடி போற்றி – 1008' என்ற நூலை காலபூஷணம் இ.சியாமளாதேவி வடிவேலனும் எழுதியுள்ளனர்.

# வயோதிபப் பெண் கொலை

கேகாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, கவுடுகம, ஹெட்டிமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த பெண் மீது, அவரின் பேரனினால் மேற்கொள்ளப்பட்ட கூரிய ஆயுதத் தாக்குதலினால் அவர் பாரதூரமான நிலையில் கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். இதுதொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கவுடுகம, ஹெட்டிமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 85 வயதுடைய வயோதிபப் பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த கொலைச் சம்பவத்துக்கான காரணம் இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதுடன், இந்த சம்பவத்தை தொடர்ந்து சந்தேகநபர் அந்த பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார். சந்தேகநபரை கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளை கேகாலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk
thamilanbusiness@gmail.com

# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள யூனிலீவர் ஸ்ரீலங்கா

பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் இளைஞர்களை வலுவூட்டுவதற்குமான அர்ப்பணிப்புடன் நாடளாவிய ரீதியில் தொழில் மேம்பாட்டுத் திட்டத்தை ஆரம்பிப்பதற்காக யூனிலீவர் ஸ்ரீலங்காவானது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் கைகோர்த்துள்ளது. இந்த முன்முயற்சியானது தொழில் வாய்ப்புகளை உருவாக்கி விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலில் இளைஞர்களுக்கான எதிர்காலத்திற்கேற்ற தொழில்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இறுதியில் நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பை மேற்கொள்வதையும் இது அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இலங்கை சார்ந்த இளைஞர்களை ஒரு நோக்கத்தைக் கொண்ட மற்றும் எதிர்காலத்திற்கேற்ற தொழிலைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டு யூனிலீவர் ஸ்ரீலங்கா மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இணைந்து முதலில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் 350 இற்கும் அதிகமான பங்கேற்பாளர்களுக்கு பயிற்சிப் பட்டறைகளை நடத்தவுள்ளது. இத்திட்டமானது பின்னர் நாட்டின் ஏனைய பகுதிகளையும் உள்ளடக்கியதாக விரிவுபடுத்தப்படும். தொழில் வல்லுநர்களைச் சந்திப்பதற்கும் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலில் ஒரு தொழிலைத் தொடர்வதற்குமான அறிவுடன் தெளிவான தொழில் நோக்கங்களை நிறுவுவதற்கான வழிகாட்டல்களைப் பெறுவதற்கான வாய்ப்பை பங்கேற்பாளர்கள் பெறுவார்கள். இப்பட்டறைகளைத் தொடர்ந்து தெரிவுசெய்யப்பட்ட எண்ணிக்கையிலான மாணவர்கள் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தில் (SLIM) 6 மாத விற்பனை தொடர்பான பாடநெறியில் இணைவதற்குத் தெரிவு



யூனிலீவர் ஸ்ரீலங்கா, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. இடமிருந்து வலமாக: தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் பயிற்சிப் பணிப்பாளர் ரஷித்த தெலபொல, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிர்வாகப் பணிப்பாளர் மனுல பெரேரா, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் பசிந்து குணரத்ன,விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க, ஹிந்துஸ்தான் யூனிலீவர் லிமிட்டெட் நிறைவேற்றுப் பணிப்பாளர் அநுராதா ரஸ்தான், யூனிலீவர் ஸ்ரீலங்கா வாடிக்கையாளர் மேம்பாட்டுப் பணிப்பாளர் பாத்திய தயாரத்ன, யூனிலீவர் ஸ்ரீலங்காவின் மனித வளப் பணிப்பாளர் அனன்யா சபர்வால், யூனிலீவர் ஸ்ரீலங்காவின் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான ஹாஜர் அலபிபி

செய்யப்படுவார்கள். சிறந்த ஈடுபாட்டை ஏற்படுத்துவதற்கும் கற்றல் அனுபவத்தை ஊக்குவிப்பதற்குமான பாடநெறிக் கட்டணத்தில் ஒரு பகுதியானது யூனிலீவர் ஸ்ரீலங்காவினால் பங்களிப்புச் செய்யப்படுவதோடு 3 மாத விரிவுரை பங்கேற்பை நிறைவு செய்த பின்னர் பங்கேற்பாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் உறுதி செய்யப்படும்.

இப்புரிந்துணர்வு கைச்சாத்திடும் நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட ஹிந்துஸ்தான் யூனிலீவர் லிமிட்டெட் நிறைவேற்றுப் பணிப்பாளர் அநுராதா ரஸ்தான் கருத்து வெளியிடுகையில், "நிலைபேறான வாழ்க்கையை அனைவருக்கும் பொதுவானதாக மாற்றுவதற்கான எமது வர்த்தக நாம நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட யூனிலீவரின் சமூக அர்ப்பணிப்பானது ஒரு நியாயமான மற்றும் சமூகங்களை உள்ளடக்கிய உலகை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. 2030 ஆம் ஆண்டுக்குள் உலகம் முழுவதும் உள்ள 10 மில்லியன் இளைஞர்களின் திறமையை மேம்படுத்துவதும் அத்தியாவசிய திறன்களுடன் அவர்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதும் அத்தகைய ஓர் உறுதிப்பாடாகும். அரசாங்கமோ அல்லது தனியார் துறையோ தனியாக இதைச் செய்ய முடியாது. எனவே, எமது இளைஞர்களுக்கு இந்த வாய்ப்புகளை வலுப்படுத்த பல்வேறு குழுக்களிடையேயான ஒத்துழைப்பும் முக்கியமானதாகும்." - என்றார்.

யூனிலீவர் ஸ்ரீலங்காவின் மனிதவளப் பணிப்பாளர் அனன்யா சபர்வால் தனது எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டபோது, "யூனிலீவர் ஸ்ரீலங்கா ஆகிய நாம் 2025 ஆம் ஆண்டளவில் 1,00,000 இளைஞர்களின் வாழ்க்கையுடன் இணைய உறுதி பூண்டுள்ளோம். இது நாடு முழுவதிலும் உள்ள பல்கலைக்கழகங்களுடன் இணைந்து மாணவர்களின் ஈடுபாட்டின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இங்கு தொழில்துறை வெளிப்பாட்டிற்கான ULearn போன்ற தனித்துவமான வேலைவாய்ப்பு திட்டமாதிரிகளை நாம் வழங்குகிறோம். இந்த வேளையில் இந்த ஒத்துழைப்பை சாத்தியமாக்கிய அனைவருக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். யூனிலீவர் ஸ்ரீலங்காவுக்கும் இளைஞர் விவகார அமைச்சுக்குமிடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க இப்பங்காளித்துவமானது பாடசாலைக் கல்வியை முடித்தவர்களைச் சென்றடைவதுடன் யூனிலீவருக்கு வெற்றி, இலங்கைக்கு வெற்றி எனும் எமது தாரக மந்திரத்தை வாழச்செய்வதற்கான சிறந்த வழியாகும்." - என்றார்.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள யூனிலீவர் ஸ்ரீலங்காவின் தலைவரும் அதன் முகாமைத்துவப் பணிப்பாளருமான ஹாஜர் அலபிபி, "நாம் 85 வருடங்களாக இலங்கையில் வேரூன்றியுள்ளோம். எமது வர்த்தக நாமங்களின் எதிர்காலம் இளைஞர்களின் கைகளில் உள்ளது என்பதை நாம் அறிவோம். யூனிலீவர் ஸ்ரீலங்கா ஆகிய நாம், நெருக்கடியான வேளையில் தேசத்திற்கு சேவை செய்வதும் தேசத்திற்காக முன்னிற்பதும் எமது கடமை என்பதை அறிவோம். எனவே, நாம் தொழிற்சாலைகளில் முதலீடுகளைச் செய்துள்ளோம். மேலும் இந்தக் கூட்டாண்மை மூலம் எமது இளைஞர் தலைமுறையை மேம்படுத்துவதிலும் முதலீடு செய்துள்ளோம்." - என்றார்.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க கருத்துத் தெரிவிக்கையில்,

"எமது தேசத்தின் இளைஞர்களை மேம்படுத்தும் பணியில் கூட்டாக இணைந்து செயற்படும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் யூனிலீவர் ஸ்ரீலங்கா ஆகிய நிறுவனங்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வெற்றி மற்றும் வளர்ச்சியைக் காண நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது முக்கியம். பல நாடுகளில் யூனிலீவர் தனது வணிகத்தை மேம்படுத்துவது தொடர்பில் பல்வேறு சிறந்த நடைமுறைகள் மற்றும் அனுபவங்களைக் கொண்டுள்ளது என நான் நம்புகிறேன். இதன் மூலம் எமது இளைஞர்களுக்கு அறிவாற்றல் வளம் கிடைக்கும். அரசாங்கம் இந்த முயற்சியை முழுமையாக ஆதரிப்பதோடு, எதிர்காலத்தில் இவ்வாறான கூட்டாண்மைகளையும் எதிர்பார்க்கிறது." - என்றார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவரும் அதன் பணிப்பாளர் நாயகமுமான பசிந்து குணரத்ன கருத்துத் தெரிவிக்கையில், "யூனிலீவர் ஸ்ரீலங்காவுடன் இணைந்து, இளைஞர்களை வலுவூட்டும் 'தாருண்யட்ட அருத்த' திட்டத்தை அறிமுகப்படுத்துவதை அறிவிப்பதில் நாம் பெருமிதமடைகிறோம். இத்திட்டமானது, வணிகத் துறையில் புரட்சியை ஏற்படுத்தும் திறன் வாய்ந்த சந்தைப்படுத்துபவர்களின் புதிய தலைமுறையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சந்தைப்படுத்தலில் விலைமதிப்பற்ற பயிற்சி மற்றும் நடைமுறை அனுபவத்தின் மூலம், இளைஞர்களுக்குள் மாற்றத்தை ஏற்படுத்தவும் தங்களுக்கும் ஏனையோருக்கும் வாய்ப்புகளை உருவாக்கவும் நாம் இதன் மூலம் அதிகாரமளிக்கிறோம். யூனிலீவர் ஸ்ரீலங்காவின் தளராத ஆதரவிற்கும் எமது இளைஞர்களின் ஆற்றல் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்." என்றார்.

# கத்தாரில் இருந்து பணம் அனுப்பும் சேவையின் 20 வருட நிறைவைக் கொண்டாடிய கொமர்ஷல் வங்கி

COMMERCIAL BANK

கத்தாரில் இருந்து பணம் அனுப்பும் சேவையின் 20 வருட நிறைவை கொமர்ஷல் வங்கி அண்மையில் கொண்டாடியது. அங்குள்ள எக்ஸ்சேன்ஜ் ஹவுஸ் முகாமைத்துவப் பிரதிநிதிகள், ஊழியர்கள், வங்கியின் பிரதான வாடிக்கையாளர்கள் எனப் பல்வேறு பிரமுகர்கள் கலந்துகொண்ட ஒரு நிகழ்வாக இது அமைந்திருந்தது.



கத்தாரில் இடம்பெற்ற வைபவத்தின்போது...

இந்த மைல்கல் நிகழ்வு தோஹாவில் உள்ள அலாவுதி ஹோட்டலில் இடம்பெற்றது. கத்தாரில் உள்ள இலங்கைத் தூதுவர் மபாஸ் மொஹிடீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தார். கொமர்ஷல் வங்கியின் டிஜிட்டல் வங்கிப் பிரிவு உதவிப் பொது முகாமையாளர் பிரதீப் பந்துவன்ஸவின் வரவேற்புரையோடு நிகழ்வுகள் ஆரம்பமாகின. வங்கியின் பிரதான செயற்பாட்டு அதிகாரி எஸ்.பிரபாகர் முக்கிய தகவல்களை உள்ளடக்கிய பிரதான உரையை நிகழ்த்தினார்.

பணம் அனுப்பி வைப்பதில் கத்தாரில் உள்ள வங்கியின் பங்காளிகள், தெரிவு செய்யப்பட்ட இலங்கை வாடிக்கையாளர்கள் மற்றும் வங்கி ஊழியர்கள், வங்கியின் சில்லறை வங்கிப் பிரிவு மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவுப் பிரதி பொது முகாமையாளர் ஹஸ்ரத் முனசிங்க, உலகளாவிய பணம் அனுப்பல் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளர் திருமதி ரங்கிகா சந்திரசேன, கத்தாரில் உள்ள வங்கியின் வர்த்தக ஊக்குவிப்பு அதிகாரிகள் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்நிகழ்வைக் குறிக்கும் வகையில் கேக் வெட்டப்பட்டு மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. மேலும் பணம் அனுப்பும் விடயத்தில் வங்கியின் பங்காளிகளாக செயற்படுகின்றவர்களுக்கு வங்கி முகாமைத்துவம் நினைவுப் பரிசுகளையும் வழங்கிவைத்தது.

இந்நிகழ்வு பற்றி கருத்து வெளியிட்ட கொமர்ஷல் வங்கியின் பிரதான செயற்பாட்டு அதிகாரி எஸ். பிரபாகர் "கத்தாரில் இருந்து பணம் அனுப்பிவைக்கும் பணியை வங்கி தொடங்கிய போது, இலங்கைக்கு பணம் அனுப்பி வைப்பதற்கான இணையவழி சமகாலத் தீர்வொன்றையும் நாம் முன் வைத்தோம். புலம்பெயர்ந்து பணிபுரியும் ஊழியர்களுக்கு தமது வீடுகளுக்கு வெறுமனே பணம் அனுப்பி வைப்பது மட்டுமே தேவையாக இருக்காது என்பதை நாம் நன்கு உணர்ந்திருந்தோம். ஆகவே, எமது சேவைகள் மூலம் பணம் அனுப்புவோர் மற்றும் அதனால் பயன் அடைவோர் ஆகியோர் மீது கவனம் செலுத்தி பல விடயங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்தோம். கடந்த 20 வருட காலத்தில் கத்தார் பணம் அனுப்பி வைக்கும் பிரிவில் ஒரு பிரதான சந்தையாக வளர்ச்சி கண்டுள்ளது. இங்கு சுமார் 1,20,000 இலங்கையர்கள் பணிபுரிகின்றனர். இன்று 15க்கும் மேற்பட்ட வர்த்தகப் பங்காளிகளுடன் கத்தாரில் எமது செயற்பாடுகளை விருத்தி செய்துள்ளமை பற்றி நாம் பெருமை அடைகின்றோம். இன்று இங்கு நாம் நிலைத்திருப்பதானது 20 வருட கால எமது வெற்றிகரமான பயணத்தின் சான்றாகவும் அமைந்துள்ளது" - என்றார்.

# Coca-Cola அறக்கட்டளையிலிருந்து 7,800 வறிய குடும்பங்களுக்கு உதவி

தற்போதைய சூழ்நிலையில் அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத சமூகத்தினரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. Coca-Cola அறக்கட்டளை (("TCCF" Coca Cola Company இன் உலகளாவிய நன்கொடையாளர் பிரிவானது) 7,800 பின்தங்கிய வறிய மற்றும் அன்றாட உணவுக்காக கஷ்டப்படும் குடும்பங்களின் நலனுக்காக சேவாலங்கா அறக்கட்டளை மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அண்மையில் நன்கொடைகளை வழங்கியது. "Say We Care" எனும் இத்திட்டத்தின் மூலம் சேவாலங்கா அறக்கட்டளை மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் (SLRCS) இணைந்து உதவி தேவைப்படும் குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து இந்த உதவிகளை வழங்கின.





விலைவாசி உயர்வு, விவசாய உற்பத்திக் கட்டுப்பாடுகள் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் வறுமை நிலை 25% அதிகரிக்கும் என உலக வங்கி முன்கூட்டியே மதிப்பிட்டிருந்த நிலையில், இதன் விளைவாக நாட்டில் பல குடும்பங்கள் ஒரு நாளைக்கு உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைக்கவேண்டியிருந்தது. விலை அதிகரிப்பு காரணமாக உணவின் ஊட்டச்சத்து தரத்தையும் குறைத்திருந்ததுடன், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களை மேலும் அசௌகரியப்படுத்தியுள்ளது.



சமூக சேவைகள் அமைச்சின் கீழ் உள்ள தன்னார்வ சமூக சேவை அமைப்பான சேவாலங்கா அறக்கட்டளை, TCCF இன் அனுசரணையில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 10 மாவட்டங்களை உள்ளடக்கிய 6,000 நிவாரணப் பொதிகளை விநியோகித்தது மற்றும் பிராந்திய செயலகங்கள் மற்றும் கிராம சேவகர்கள் ஊடாக உதவி தேவைப்படும் குடும்பங்களை அடையாளம் கண்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கழிவு சேகரிப்பை முக்கிய வருமான ஆதாரமாகக் கொண்டு வாழும் மக்கள் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 10 மாவட்டங்களில் 1,800 குடும்பங்களுக்கு SLRCS உணவுப் பொதிகளை வழங்கியது.

Say We Care முன்முயற்சி குறித்து கருத்து தெரிவித்த Coca-Cola அறக்கட்டளையின் தலைவர் Saadia Madsbjerg "எங்களது ஒத்துழைப்புடன் பாதிக்கப்பட்ட சமூகங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடிந்ததில் பெருமையடைகிறோம். இதில் எங்களுக்கு உறுதுணையாக இருந்த பங்காளிகள், தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் எங்கள் குழுவிலுள்ள அனைவருக்கும் நாங்கள் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் அவர்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு இந்தத் திட்டத்தின் வெற்றியின் ரகசியம் என்றே கூறவேண்டும்."- எனத் தெரிவித்தார்.





அரிசி, பருப்பு, கோதுமை மா, நெத்தலிக் கருவாடு, டின் மீன், கடலைப்பருப்பு, சவர்க்காரம், கிருமி நீக்கும் திரவம், பற்பசை போன்ற பொருட்கள் அடங்கிய 30 முதல் 45 கிலோ எடையுள்ள உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. இந்தப் பொருட்கள் 4 முதல் 5 பேர் கொண்ட குடும்பத்தின் தேவைகளை சுமார் 2 மாதங்களுக்குப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானது.

பெண்கள்/ஒற்றைப் பெற்றோர் குடும்பங்கள், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் (தினசரி ஊதியம் பெறுவோர்), 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கொண்ட குடும்பங்கள் அல்லது கர்ப்பிணி அல்லது பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளைக் கண்டறிந்து, Say We Care திட்டத்தின் மூலம் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk
thamilanbusiness@gmail.com

# இலங்கையில் British Council IELTS Prize 2023 விண்ணப்பங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன




வருடாந்தபோட்டியினூடாக IELTS பரீட்சார்த்திகளுக்கு ஆங்கிலமொழிமூல பல்கலைக்கழகங்களில் கற்கை கட்டணங்களில் ஸ்ரேளிங்பவுண் வரை ஆதரவளிக்கப்படுகின்றது.

இலங்கை, சீனா, ஜப்பான், ஹொங்கொங், இந்தோனேஷியா, கொரியா, மலேஷியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்வான், தாய்லாந்து, வியட்நாம், பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கு இந்த ஆண்டு IELTS Prize இல் பங்கேற்க முடியும்

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் IELTS ஊடாக பட்டப்படிப்பு அல்லது பட்டப்பின் படிப்பு கற்கைகளுக்கு விண்ணப்பித்துள்ள மாணவர்களுக்கு இதில் பங்கேற்க முடியும் என்பதுடன் ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை தமது கற்கையை ஆரம்பிப்பவர்களுக்கு பொருந்தும் வகையில் இது அமைந்திருக்கும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி செப்டெம்பர் 15 ஆம் திகதி ஆகும்.

போட்டிகரமான விண்ணப்பத் தெரிவு முறையினூடாக இலங்கையிலிருந்து மொத்தம் ஒன்பது வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப் படவுள்ளனர். அவர்களுக்கு தமது கற்கைகளை தொடர்வதற்கு ஆதரவளிக்கும் வகையில் பணப்பரிசைப் பெற்றுக்கொள்ள முடியும்.

British Council ஸ்ரீலங்காவின் இலங்கைக்கான பணிப்பாளர் ஓர்லாண்டோ எட்வர்ட்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், ''இலங்கையர்களுக்கு இந்த விறுவிறுப்பான போட்டியினூடாக IELTS Prize ஐ வெல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். விண்ணப்பங்களை நான் எதிர்பார்ப்பதுடன் கடந்த காலங்களில் வெற்றியீட்டியவர்கள் தமது வெளிநாட்டுக் கற்கைகளினூடாகப் பயன்பெற்று அவற்றை உள்நாட்டு சமூகங்களில் பயன்படுத்துவார்கள் என நான் எண்ணுகின்றேன் - கருதுகின்றேன் - என்றார்.

''சர்வதேச கற்கை மற்றும் கைகோர்ப்பு போன்றன அனைவருக்கும் அமைதியான மற்றும் சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்குவதில் பங்களிப்பு வழங்கும் என்பதில் நாம் திடநம்பிக்கை கொண்டுள்ளோம். இந்த நம்பிக்கை மிக்க மற்றும் மதிநுட்பமான நபர்களுக்கு அவர்களின் இலக்குகளை எய்துவதற்கு - அடைவதற்கு ஆதரவளிப்பதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம்'' - என்றார்.

விண்ணப்பதாரிகளுக்கு பரிசு தொடர்பில் மேலதிக தகவல்களை விண்ணப்பிக்கும் முறை மற்றும் அடிக்கடி கேட்கப்படும் வினாக்கள் பற்றி அறிந்துகொள்ள விரும்புவோர்https://takeielts.britishcouncil.org/take-ielts/study-work-abroad/ielts-prize எனும் இணையதளத்தைப் பார்வையிடலாம்.

**IELTS பற்றி**

The International English Language Testing System (IELTS) என்பது உயர் கல்வி மற்றும் சர்வதேச புலம்பெயர்வுக்கான உலகின் புகழ்பெற்ற ஆங்கில மொழி அறிவுப் பரிசோதனையாக அமைந்துள்ளது. உலகளாவிய ரீதியில் 11,500 க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் IELTS இல் நம்பிக்கைகொண்டுள்ளன. இவற்றில் கல்வி நிலையங்கள், தொழில் வழங்குநர்கள், அரசாங்கங்கள் மற்றும் நிபுணத்துவ அமைப்புகள் போன்றன அடங்கியுள்ளன. கடந்த ஆண்டில் இலங்கையிலிருந்தும் அதிகமான பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். IELTS இன் இணை உரிமையாண்மையை British Council, IDP: IELTS அவுஸ்திரேலியா மற்றும் Cambridge Assessment English ஆகியன கொண்டுள்ளன. IELTS பற்றி மேலும் அறிந்துகொள்வதற்கு www.ielts.org.

**British Council பற்றி**

ஐக்கிய இராஜ்ஜியத்தின் கலாசார உறவுகள் மற்றும் கல்விசார் வாய்ப்புகளுக்கான சர்வதேச அமைப்பாக British Council திகழ்கின்றது. இணைப்புகளைக் கட்டியெழுப்பல், ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் உலகளாவிய நாடுகளில் வசிக்கும் மக்களிடையே புரிந்துணர்வு மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்புவதனூடாக சமாதானம் மற்றும் சுபீட்சத்துக்கு நாம் ஆதரவளிக்கின்றோம். இதனை எமது கலை மற்றும் கலாசாரம், கல்வி மற்றும் ஆங்கில மொழி ஆகியவற்றில் மேற்கொள்ளும் பணியினூடாக மேற்கொள்கின்றோம். 200 க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த மக்களுடன் நாம் பணியாற்றுவது 100கும் மேற்பட்ட நாடுகளில் பிரசன்னத்தைக் கொண்டுள்ளோம். 2020 -2021 காலப் பகுதியில் நாம் 650 மில்லியன் மக்களை சென்றடைந்திருந்தோம். மேலதிக தகவல்களுக்கு https://www.britishcouncil.lk/

# ஆண்களுக்கான நேர்த்தியான தனது ஆடையகத்தை வத்தளையில் திறந்துள்ள Emerald



இலங்கையின் முன்னணி ஆடவருக்கான ஆடை வர்த்தக நாமமான Emerald (எமரல்ட்), அதன் மற்றுமொரு கிளையை திறந்து வைத்து அதன் சில்லறை வர்த்தகத்தை மேலும் விரிவுபடுத்தியுள்ளது. வத்தளையில் உள்ள Damro கட்டடத்தின் 4 ஆவது மாடியில் அமைந்துள்ள இந்தப் புதிய கிளையானது சேர்ட்டுகள், காற்சட்டைகள் மற்றும் நவநாகரிக அணிகலன்கள் உள்ளிட்ட ஆடவருக்கான ஆடைகளுக்கான முழுமையான தீர்வுகளை வழங்குகின்ற விசாலமான மற்றும் நவீன விற்பனையகமாக அமைந்துள்ளது.

வத்தளை காட்சியறையானது Leonardo, RUNN, Focus, Mansak உள்ளிட்ட ஏனைய வர்த்தக நாமங்களுடன், ஆண்களுக்கான Emerald ஆடைகளின் முழுமையான வகைகளையும் வழங்குகின்றது. இந்தப் புதிய கிளையின் திறப்பின் மூலம் தனது வாடிக்கையாளர்களுக்கு தரமான ஷொப்பிங் அனுபவத்தை வழங்குவதை Emerald நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், அவர்கள் ஒரே கூரையின் கீழ் பரந்துபட்ட முழுமையான ஆண்களுக்கான ஆடை வகைகளைப் பெறுவதற்கும் அவர்களுக்கு விருப்பமான பேஷன் தெரிவுகளை எளிதாகவும் வசதியாகவும் அவர்களுக்கு வழங்குவதோடு, சரியான தெரிவையும் சரியான அளவுடனும் அவர்கள் பெறுவதை உறுதி செய்கிறது.

இக்கிளையின் திறப்பு தொடர்பில் Emerald International நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.எவ்.எம். இக்ரம் கருத்துத் தெரிவிக்கையில்,

"Emerald ஆகிய நாம், இலங்கையர்களுக்கு தரம், வசதி, நவீன பாணியை வழங்க உறுதி பூண்டுள்ளோம். புதிய வத்தளை ஆடையகமானது ஆண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான எமது பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல் என்பதோடு இலங்கையில் உள்ள அனைத்து ஆண்களுக்கும் நவீன பாணி மற்றும் அடையாளத்தை மேம்படுத்துவதற்கான ஒரு தளத்தை உருவாக்குகிறது." - என்றார்.

Emerald என்பது இலட்சிய மனிதனின் மனதின் ஆழத்தில் பதிக்கப்பட்ட ஒரு வர்த்தகநாமம் ஆகும். அது ஒவ்வொரு ஆடவரினதும் அலுமாரிகளிலும் இன்றியமையாத ஓர் அங்கமாக இன்று வளர்ந்துள்ளது. இலங்கையில் ஃபேஷன் போக்குகளை மாற்றுவதில் தரம், நம்பகத்தன்மை, புத்தாக்கங்களை இவ்வர்த்தக நாமம் எடுத்துக்காட்டுகிறது. இதுவே இலங்கையில் ISO தரச்சான்றிதழ்




பெற்ற ஆடை வர்த்தக நாமமாகும். இது தரத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதோடு மிகவும் வசதியான மற்றும் சமகால வடிவமைப்புகளை மட்டுமே வழங்குவதற்காக அதன் அனைத்து தயாரிப்புகளிலும் உலகத்தரம் வாய்ந்த தர நிலையை பேணுகிறது.

ஆடவருக்கான புகழ்பெற்ற ஆடை வர்த்தகநாமமான Emerald, அதன் ஒப்பற்ற சலுகைகள் மூலம் பெஷன் ஆர்வலர்களை தொடர்ச்சியாக வசீகரித்து வருகிறது. நேர்த்தியான அலுவலக (formal) சேர்ட்டுகள், காற்சட்டைகள், முதல் ஸ்டைலான வழக்கமான (casual) மற்றும் நவநாகரிக chino காற்சட்டைகள் உடனான பிற்பகலுக்கான (evening wear) சேர்ட்டுகள் வரை, Emerald ஒவ்வொரு ஆண்களின் ஃபேஷன் தேவையையும் பூர்த்தி செய்கிறது. இந்த வர்த்தகநாமத்தின் தொகுப்புகளில் வட்டக் கழுத்து (crew neck) ரீ-சேர்ட்டுகள் மற்றும் Polo சேர்ட்டுகள் உள்ளிட்ட வகைகளும் காணப்படுகின்றன. இந்த ஆடைகளுடன் இணைந்து அதனை முழுமையாக்கும் வகையில் பல விதமான இணை அணிகலன்களையும் Emerald வழங்குகிறது. அது தவிர, அவர்களின் கட்டுமஸ்தான விளையாட்டு ஆடைகள் உரிய வசதியையும் நவீன பாணியையும் தடையின்றி வழங்குவதோடு, அவர்களின் உள்ளாடைகளின் தொகுப்பு உகந்த வசதியையும் உறுதி செய்கிறது. சிறுவர் ஃபேஷன் ஆர்வலர்களையும் மறந்துவிடாமல் Emerald Junior 4 முதல் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு அழகு மற்றும் நேர்த்தியை வெளிப்படுத்துகின்ற எந்த வயதிலும் தன்னம்பிக்கையுடன் இருக்க உதவும் வகையிலான விதவிதமான ஆடைகளுடன் தங்களது மகன்களுக்கு ஸ்டைலையும் வசதியையும் பரிசாக வழங்குகிறது. அதன் மாறுபட்ட மற்றும் பரந்த ஆடைத் தெரிவு வகைகள் மூலம் Emerald உண்மையான பன்முகத்தன்மையை வெளிப்படுத்துகிறது. இதன் மூலம் ஒவ்வொரு தலைமுறை ஆடவரும் தமது தனித்துவமான பாணியையும் நம்பிக்கையையும் திறமையையும் வெளிப்படுத்த முடியும் என்பதை அது உறுதிப்படுத்துகிறது.

# உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட புதிய டிரக் மற்றும் பஸ் டயர்களை அறிமுகம் செய்துள்ள சியெட் களனி நிறுவனம்



வாயு மூலமான டயர்களை உற்பத்தி செய்யும் இலங்கையின் மிகப் பெரிய நிறுவனமான சியெட் களனி ஹோல்டிங்ஸின் உற்பத்தி வரிசையில் அதி உயர் செயற்பாடு மிக்க புதிய வர்த்தக நோக்கு டயர் தற்போது வீதிகளில் வலம் வரத் தொடங்கியுள்ளது.

சியெட் Winmile X3 AW எனப் பெயரிடப்பட்டுள்ள டிரக் பஸ் ரேடியல் டயர் (TBR) 295/80 R22.5 TL அளவு கொண்டது. இது பிரைம் மூவர்ஸ், பெற்றோல் பவுஸர்கள், பாரிய சீமெந்து தாங்கி ரக வாகனங்கள் உட்பட ஏனைய பெரிய வகையிலான போக்குவரத்து மற்றும் பயணிகள் வாகனங்கள் மற்றும் இலங்கையில் பாவனையில் உள்ள கனரக டிரக்குகளுக்கு மாற்றுவதற்கான உசிதமான உற்பத்தியாகும் என நிறுவனம் அறிவித்துள்ளது.

இலங்கையின் இன்றைய நிலையில் இறக்குமதிகளைக் குறைத்து அந்நிய செலாவணியை மீதப்படுத்தும் தேசிய முயற்சிக்கு ஆதரவளிக்கும் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள சியெட் Winmile X3 AW டயர்களாவன Renault 460 DXI, DAF XF 105/510, Tantri TBK 43, MAN PGS 440 Isuzu Giga Truck Mixer, UD Nissan Prime Mover, DAF CF 321 Dynamic 33,000 லீற்றர் எரிபொருள் பவுசர்கள், சீமெந்தை காவிச் செல்லும் வண்டிகள் மற்றும் Lanka Ashok Leyland, Yutong and King Long. பயணிகள் பேருந்து என்பனவற்றுக்கும் உகந்தவையாகும்.

உற்பத்தி தினத்தில் இருந்து மூன்று வருட கால உத்தரவாதத்துடன் கிடைக்கும் இவை, மேலதிக மைல்களுக்கு உகந்த வகையிலும் இலங்கையின் வீதி நிலைமைகளுக்கேற்ப சிறந்த செயற்பாட்டை வழங்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன என்று கம்பனி அறிவித்துள்ளது.

"இது ஒரு பிரீமியம் வகை TBR உற்பத்தியாகும். இலங்கையின் போக்குவரத்துத்துறைத் தேவையை நாம் எந்தளவு ஆழமாகப் புரிந்து வைத்துள்ளோம் என்பதையும் சந்தையில் ஏற்பட்டுள்ள சவால்களைக் கடந்து புதிய உற்பத்திகளை எந்தளவு அர்ப்பணிப்புடன் நாம் தொடருகின்றோம் என்பதையும் இது பிரதிபலிக்கின்றது" - என்று கூறினார் சியெட் களனி ஹோல்டிங்ஸின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரவி டட்லானி. அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், "எமது டயர் வாடிக்கையாளர்கள் மத்தியில் செலவுகள் அதிகரித்து வருகின்ற நிலையில், போட்டித்தன்மை மிக்க விலைகளுடன் கூடிய உற்பத்திகளின் தேவையும் அதிகரித்துள்ளது. எமது புதிய உற்பத்திகள் மூலம் நாம் இந்தத் தேவைக்கு முகம் கொடுத்துள்ளோம்" - என்று அவர் மேலும் கூறினார்.

இலங்கை மற்றும் இந்திய கூட்டு முயற்சிகளில் மிகவும் வெற்றிகரமானதாகக் கருதப்படும் இலங்கையில் உள்ள சியெட் களனி உற்பத்தி வளாகம் இலங்கையின் மொத்த டயர் தேவையில் அரைவாசியை உற்பத்தி செய்கின்றது. இலங்கையில் இந்தக் கூட்டு முயற்சியின் மீதான ஒட்டுமொத்த முதலீடு இன்றைய நிலையில் 8 பில்லியன்கள் ஆகும். இலங்கையில் இதன் உற்பத்திச் செயற்பாடுகள் றேடியல் டயர்களில் (பயணிகள் கார்கள், வேன்கள் மற்றும் விளையாட்டு நோக்கு வாகனங்கள்), வர்த்தக ரீதியான (நைலோன் மற்றும் றேடியல்) மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகள் மற்றும் விவசாயப் பிரிவு வாகனங்கள் என்பனவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றன.

இலங்கை சந்தைத் தேவையில் ரேடியல் பிரிவில் 48 வீத பங்கையும், ட்ரக் பிரிவில் 80 வீத பங்கையும், இலகு ட்ரக் டயர் பிரிவில் 84 வீத பங்கையும், முச்சக்கர வண்டி பிரிவில் 51 வீத பங்கையும், மோட்டார் சைக்கிள் பிரிவில் 36 வீத பங்கையும், விவசாய வாகனப் பிரிவு டயர் தேவையில் 72 வீதத்தையும் சியெட் வர்த்தக முத்திரை பூர்த்தி செய்கின்றது. மேலும் சியெட் களனி அதன் உற்பத்திகளில் 20 வீதத்தை 16 தெற்காசிய, மத்திய கிழக்கு, ஆபிரிக்கா மற்றும் தூர கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யுனிலீவரின் இ–வர்த்தகத் தளத்தை விரிவுபடுத்த CBL குழுமத்துடன் அதன் மூலோபாயக் கூட்டாண்மை




யூனிலீவர் ஸ்ரீலங்கா தனது உத்தியோக பூர்வ இ-வர்த்தகத் தளமான uStore.lk ஐ CBL குழுமத்துடன் மூலோபாய பங்காளித்துவத்தின் மூலம் வளப்படுத்துவதில் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. இது வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும் தயாரிப்புகளின் வீச்சை மேலும் விரிவுபடுத்துகிறது. UStore.lk இன் தொடர் தயாரிப்புப் பட்டியல் விரிவாக்கத்தின் முதல் படியான இந்த நடவடிக்கையானது இலங்கையில் FMCG கொள்வனவு அனுபவத்தை மிகவும் வசதியாக மாற்றுவதற்கு இலங்கையின் இ-வர்த்தக எல்லையை முன்னோக்கி நகர்த்துவதில் யுனிலீவர் ஸ்ரீலங்காவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பைப் பறைசாற்றுகின்றது.

2019 ஆம் ஆண்டு முதன்முதலில் தொடங்கப்பட்ட uStore.lk, நாட்டிலுள்ள நுகர்வோர்களின் விருப்பமான ஒரு கொள்வனவுத் தளமாகக் கணிசமான வரவேற்பைப் பெற்றுள்ளது. ஏனெனில், இது அவர்களின் வீடுகளின் பாதுகாப்பு, சௌகரியம் மற்றும் வசதி ஆகியவற்றிற்கேற்ப பொருட்களை நேரடியாக வாங்கும் வசதியை வழங்குகிறது. தின்பண்டங்கள், மசாலாப் பொருட்கள், பருப்பு வகைகள், தேங்காய்ப்பால் மற்றும் தானியங்கள் உட்பட புகழ்பெற்ற 7 CBL குழும வர்த்தகச் சின்னங்களின் 80 க்கும் மேற்பட்ட தயாரிப்புகளைச் சேர்ப்பதன் மூலம் uStore.lk, கொள்வனவாளர்கள் இப்போது 300 க்கும் மேற்பட்ட தயாரிப்புகளை நாட்டின் எந்தப் பகுதிக்கும் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இன்றைய காலத்தில் நிகழ்நிலையில் கொள்வனவு செய்பவர் முன்னெப்போதையும் விட அதிக அனுபவமும் - அறிவும் கொண்டவர். பல்வேறு வகைகளிலும் பல்வேறு ஊடகங்களிலும் தங்கள் தேவைகள், உந்துதல்கள் மற்றும் சந்தர்ப்பங்களைப் பொறுத்துக் கொள்வனவு செய்கின்றார். சில சிறந்த வர்த்தகச் சின்னங்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களை அணுகும் அதே வேளை, கொள்வனவு செய்பவர்கள் தங்களின் அனைத்துக் கூடைத் தேவைகளையும் ஒரே மேடையில் அவர்களின் வசதிக்கேற்ப வாங்குவதை யூனிலீவர் ஸ்ரீலங்கா நோக்காகக் கொண்டுள்ளது. பிளாட்ஃபார்மில் உள்ள ஒவ்வொரு பிராண்டும் கவனமான தெரிவுச் செயன்முறை மற்றும் தரவு சார்ந்த நுண்ணறிவுகளைப் பின்பற்றி பொருத்தம் விரும்பத்தக்கது. சிறப்புத்தேர்ச்சி மற்றும் நிலைத்தன்மையின் அளவுகோல்களின் அடிப்படையில் அமையும் கவனமாகப் பகுப்பாய்வு செய்யப்பட்ட தரவு மற்றும் அடையாளம் காணப்பட்ட போக்குகளின் அடிப்படையில் இலங்கையின் நிகழ்நிலைக் கொள்வனவாளர்களைக் குறிவைத்து குறிப்பாக நுகர்வோரை மையமாகக் கொண்ட ஆனால், வேறுபட்ட தொகுப்புகளை நிறுவனம் உருவாக்கும்.

இந்தக் கூட்டாண்மையைக் குறிக்கும் வகையில் யுனிலீவர் ஸ்ரீலங்காவின் தலைவரும் முகாமைப் பணிப்பாளருமான திருமதி ஹஜர் அலாபிபி கூறுகையில், "UStore.lk ஆரம்பத்தில் யுனிலீவர் ஸ்ரீலங்காவின் பல்வேறு வகையான தயாரிப்புகளை ஒரே, அதிநவீன இ-வர்த்தகத் தளத்தில் பிரத்தியேகமாக வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டது. இன்று FMCG க்கான மேம்பட்ட அணுகலுடன் விரிவாக்கப்பட்ட UStore.lk தளத்தை நாங்கள் அறிமுகப்படுத்தியதால் எனது வாடிக்கையாளர் மேம்பாடு மற்றும் தகவல் தொழில்நுட்பக் குழுக்களின் முயற்சிகள் பலனளிப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். யூனிலீவர் ஸ்ரீலங்கா மற்றும் CBL குழுமம் இணைந்து இலங்கை மக்களால் போற்றப்படும் வர்த்தகச் சின்னனங்கள் மற்றும் நாட்டில் ஆழமான வேர்களைப் பகிர்ந்துகொள்வதால் CBL குழுமத்துடன் பங்காளராக இருப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்." - என்றார்.

CBL குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி திருமதி ஷியா விக்கிரமசிங்க கருத்துத் தெரிவிக்கையில்,

"uStore.lk, இயங்குதளத்தில் யுனிலீவர் ஸ்ரீலங்கா உடனான கூட்டாண்மை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன், ஏனெனில், இது எங்களுடைய வாடிக்கையாளர்களுடன் நேரடியான தொடர்புகளுடன் புதிய - வளர்ந்து வரும் ஊடகம் மூலம் மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்க உதவுகிறது. அவர்கள் இப்போது uStore.lk, இல் உள்நுழைந்து, சிறப்புச் சலுகைகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களை அனுபவிக்கும்போது வசதியாக உணவு மற்றும் குளிர்பானங்கள், தனிப்பட்ட பராமரிப்பு மற்றும் வீட்டு பராமரிப்புப் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியும்" - என்றார்.

CBL குழும தயாரிப்புகள் 16 ஜூன் 2023 முதல் uStore.lk, இல் கிடைக்கும். யுனிலீவர் ஸ்ரீலங்கா நாட்டில் 85 ஆண்டுகளாக ஆழமாக வேரூன்றி, உண்மையான இலங்கை வாழ்க்கை முறையைப் பாதுகாத்து வளர்க்கும் அமைப்பை உருவாக்குகிறது. இந்நிறுவனம் இலங்கையின் முன்னணியான வேகமாக நகரும் நுகர்வோர் பொருட்கள் நிறுவனங்களில் ஒன்றாகும். அத்துடன், அதன் 96% தயாரிப்புகளை உள்நாட்டிலேயே அது உற்பத்தி செய்கின்றமை மிகச் சிறப்பான அம்சமாகும்.

# வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைபெற்றாலும் சிங்களமயமாக்கலே மேலோங்கியுள்ளது

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி. குற்றச்சாட்டு



மட்டக்களப்பு செய்தியாளர்

பொருளாதார ரீதியாக அதலபாதாளத்தில் இருக்கும் நாட்டை மீட்டெடுப்பதற்காக பல முயற்சிகள் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேநேரம், வடக்கு, கிழக்கிலே சிறிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைபெற்று வந்தாலும், அங்கு சிங்கள மயமாக்கலே மேலோங்கியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த கோட்டபாய ராஜபக்ஷவின் காலத்தில் அமைச்சர்களாகவிருந்த உதய கம்மன்பில, விமல் வீரவங்ச, சரத் வீரசேகர ஆகியோர் சிங்கள மயமாக்கலுக்கு உறுதுணையாக இருக்கின்றார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி அபிவிருத்தி உப கருத்திட்டத்தின் கீழ் 33 மில்லியன் நிதியொதுக்கீட்டில் போரதீவுப்பற்று பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்படவுள்ள கலாசார மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு பிரதேச சபைச் செயலாளர் வி.கௌரிபாலன் தலைமையில் வெல்லாவெளியில் வியாழக்கிழமை(29) இடம்பெற்றது.

இதன்போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கான முன்னெடுப்புகள் நடைபெற்று வருகின்றன. அதற்காக அமைச்சரவை அனுமதி கொடுத்து பாராளுமன்றத்துக்கு சட்டமூலமும் வர இருக்கின்றது. ஆனாலும், இந்தப் பொருளாதாரச் சூழலுக்கு என்ன காரணம் என்பதை எமது அரசியல் தலைவர்கள் அறிந்தும் அதற்கான தீர்வைக் கொடுக்கமுடியாத ஒரு சூழ்நிலையிலேயே இன்றும் இருக்கின்றார்கள்.

அரசு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சியில் ஐம்பது வீதம் நிறைவேறியுள்ளதாக ஜனாதிபதி லண்டனில் வைத்து தெரிவித்துள்ளார். ஆனால், அந்த ஐம்பது வீதம் என்பதை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது வேறு; பொருளாதார ரீதியான அபிவிருத்தி என்பது வேறு. இந்த அரசாங்கம் வந்த பின்னர் ஒருசில நல்ல காரியங்களைச் செய்திருக்கின்றது. அதனை நாம் மறந்துவிட முடியாது. காணி விடுவிப்புகள் நடைபெற்றிருக்கின்றன. கூடுதலான அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஆனால், தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய அளவுக்கு இணைந்த வடகிழக்கிலே ஒரு நிரந்தரமான தீர்வைக் கொண்டுவருவதற்கான எந்தவொரு முயற்சியும் எடுக்கப்படவில்லை. 2009ஆம் ஆண்டு வரையில் இந்த நாட்டில் ஆயுதப்போராட்டம் நடந்தது. 2009 இற்குப் பின்னர் இந்த நாட்டின் வடக்கு, கிழக்கிலே சிங்கள மயமாக்கல் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த யுத்தத்துக்கு ஜனாதிபதி ஒத்துழைப்பு வழங்காவிட்டாலும் அரச இயந்திரங்கள், அரச அதிகாரிகள் இராணுவத்துடன் இணைந்து அந்த வேலைகளைச் செய்துகொண்டிருக்கின்றார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் மக்களுடைய முன்னேற்றம், அபிவிருத்திக்குத்தான் நான் முதலிடம் கொடுப்பேன். அதற்காக நான் அரசுடன் இணைந்து இந்த வேலைகளைச் செய்ய வேண்டும் என்றில்லை. கடந்த பாராளுமன்றத் தேர்தலிலே மட்டக்களப்பு மாவட்டத்தில 256 பேர் போட்டியிட்டு 05 பேர் மாத்திரமே வெற்றி பெற்றுள்ளோம். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டால் அவர் கட்சி சார்ந்து செயற்படக் கூடாது என்பது எனது உறுதியான கொள்கையாகும் - என்றார்.

# நெல் கொள்வனவுக்கான விலையை நிர்ணயிக்குமாறுகோரி ஆர்ப்பாட்டம்

## மட்டக்களப்பு விவசாயிகள் முன்னெடுப்பு







கல்லடி செய்தியாளர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், நெல் கொள்வனவுக்கான விலையை விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் வகையில் நிர்ணயிக்குமாறுகோரி கண்டன ஆர்ப்பாட்டமொன்று மட்டக்களப்பு நகர் காந்தி பூங்கா வளாகத்தில் புதன்கிழமை(28) இடம்பெற்றது.

இதன்போது ஒன்றுகூடிய மாவட்டத்தின் பல்வேறு விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள்,நெல் மூடைகளை தமது முதுகில் தாங்கியவாறு மட்டக்களப்பு மாவட்ட செயலகம் நோக்கிப் பேரணியாகச் சென்றனர்.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளைத் தாங்கியிருந்தனர். மட்டக்களப்பு மாவட்டச் செயலக முன்றலைச் சென்றடைந்த விவசாயிகளை மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா சந்தித்தார். இதன்போது தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை ஜனாதிபதியிடம் கையளிப்பதற்காக அரச அதிபரிடம் கையளித்தனர்.

தன்னிடம் கையளிக்கப்பட்ட மகஜரை ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதாக அரச அதிபர் இதன்போது தெரிவித்ததையடுத்து அங்கிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். இந்நிலையில், மாவட்டச் செயலகத்துக்கருகே விவசாய அமைச்சரின் உருவப் பொம்மையை எரித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# பாடசாலைகளில் விற்பனை செய்யப்படும் சிற்றுண்டிகளை பரிசோதனை செய்யக் கோரிக்கை

பாண்டிருப்பு செய்தியாளர்

கல்முனை பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளில் இயங்கிவரும் சில சிற்றுண்டிச்சாலைகளில் மாணவர்களின் சுகாதாரத்துக்கு பொருத்தமற்ற வகையில் உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாகவும் அவ்வாறான சிற்றுண்டிச் சாலைகளை பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பரிசோதனைக்குட்படுத்துமாறும் பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

இங்குள்ள பாடசாலைகளில் சிற்றுண்டிச்சாலைகளை நடத்துவோர் சுகாதாரப் பிரிவினரால் பரிந்துரைக்கப்பட்ட உணவுப் பொருட்களை விற்பனை செய்யாது சுகாதாரத்துக்குப் பொருத்தமற்ற உணவுப் பண்டங்களை விற்பனை செய்கின்றனர். இதனால் மாணவர்களின் உடல் நலம் பாதிக்கப்படுகிறது.

சில சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் நீண்ட நாட்கள் பாவித்த எண்ணெயில் மீண்டும் மீண்டும் பொரித்து வடை போன்ற சிற்றூண்டிகளைச் செய்துவருகின்றனர். இதனால் உணவில் ஒருவித செக்கு மணம் வீசுகின்றது. அத்துடன், கோதுமை மாவில் தயாரிக்கப்படும் ரொட்டி, பரோட்டா, பற்றிஸ், ரோல்ஸ் போன்றவை அரைகுறையாக வெந்தது பாதி வேகாதது பாதியாகவும் உள்ளது.

மேலும் கலர் கடதாசிகளில் உணவுப் பொருட்களைச் சுற்றிக் கொடுக்கின்றனர். இதனை பாடசாலை நிர்வாகங்கள் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கண்டும் காணாமல் இருப்பதாக பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். பாடசாலை சிற்றுண்டிச்சாலைகள் விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய அளவு அக்கறை செலுத்தவேண்டுமென பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# போடியார் புலம்பல்!



சிங்களவர்கள் தமிழர்களிட காணிய புடிச்சதாலதான் தாம் புலிகள் இயக்கத்தில சேர்ந்து போராடினதாக மட்டக்களப்பு எம்பி பொடியன் புள்ளயான் மகாவலி அதிகார சப அதிகாரிகளிட்ட சொன்னவர் எலுவா? ஓண்டாம்பி புலிகள் போட்ட பிச்சயாலதான் இண்டைக்கு நீ அரசியலில சேர்ந்து தனிக்கட்சி அதுவும் புலிகளில இருந்து பெயரை கொப்பிடிச்சு பேர் வைச்சு முதலமைச்சர், எம்பி, இராஜாங்க அமைச்சர் எண்டு இந்த நிலைக்கு வந்திருக்கா எலுவா..? நீ நண்டி சொல்லோணும் வேலுப்பிள்ளட மகன் தலைவர் பிரபாகரனுக்கு. மகிந்தராஷபக்ச அங்கிளுக்கு இல்ல... சரியாடாம்பி!

# வீதிகள் புனரமைப்பு



கல்லடி செய்தியாளர்

மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முனைக்காடு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள பாடசாலை வீதி உள்ளிட்ட உள் வீதிகள் துரிதமாக அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் நிதியொதுக்கீட்டின் கீழ் விவசாயிகள், மீனவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பயணிக்கக்கூடிய அளவுக்கு போக்குவரத்து சேவையை இலகுபடுத்தும் நோக்கில் வீதிகள் புனரமைக்கப்படுகின்றன.

புனரமைப்புப் பணிகளை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன் மற்றும் மண்முனை தென்மேற்கு பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் குகநாதன் உள்ளிட்டோர் செவ்வாய்க்கிழமை (27) பார்வையிட்டனர்.

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



கல்லடி செய்தியாளர்

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வித்தியாலய அதிபர் எஸ்.கதிர்காமத்தம்பி தலைமையில் திங்கட்கிழமை(26) வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு, புளியந்தீவு - புனித மரியாள் பேராலய, புனித ஜோசப் வாஸ் சபையினரின் வேண்டுகோளுக்கிணங்க, மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் - 1975ஆம் ஆண்டு சாதாரண தர பழைய மாணவர்கள் குழுவின் நிதியுதவியுடன் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் இதன்போது வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் அருட்தந்தை சி.வி.அன்னதாஸ் புனித ஜோசப் வாஸ் சபை உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், குழுவின் உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# வைரவிழாக் கொண்டாடும் அர்-றஹீமியா வித்தியாலயம்

எஸ்.சினீஸ்கான்

60 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாகிய அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையே தற்போது அக்/ அர் - றஹீமியா வித்தியாலயமாக வளர்ச்சியடைந்துள்ளது. இதன் வைர விழா ஜூன் 01ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

AR-RAHEEMIYA VIDYALAYA
PADDIYADIPPIDDI, AKKARAIPATTU

பட்டியடிப்பிட்டி கிராம மக்களின் கல்வி, சமூக அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்குடன் எஸ்.எச்.வீ.அப்துல் றஹீம் ஹாஜியார் தனக்கு சொந்தமான சுமார் ஒன்றரை ஏக்கர் காணியினை இலவசமாக வழங்கினார். ஆரம்பத்தில் ஓலைக்குடிசையினால் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை என்ற பெயருடன் தரம் 1 முதல் தரம் 5 வரை ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதல் அதிபராக மர்ஹூம் அபுசாலி நியமிக்கப்பட்டார்.

பின்னர், பல சாதனைகள் படைத்து தரம் 01முதல் தரம் 09வரை பல சாதனைகள் படைத்து இயங்கிவரும் இப்பாடசாலையில் 17 ஆசிரியர்கள் கற்பிக்கும் அதேவேளை, 240 மாணவர்கள் கல்விபயில்கின்றனர். தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சுமார் 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். மேலும் பாடசாலையில் பயிலும் மாணவர்கள் பாடசாலை, வலய மட்ட, மாகாணமட்ட போட்டிகளில் பங்குபற்றி சாதனைகள் படைத்திருப்பதும் சிறப்பம்சமாகும்.

அதேபோல் பழைய மாணவர்கள் பலர் பல்கலைக்கழகங்களில் கற்றுக்கொண்டிருப்பதுடன் வைத்தியர்களாக, ஆசிரியர்களாக, ஏனைய பல அரச, தனியார் துறையில் பதவிகளை வகிப்பதுடன் சமூகத்தின் வளர்ச்சிக்கும் பங்காற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

இதுவரையில் எட்டு அதிபர்கள் (தற்போதைய அதிபர் உட்பட) இங்கு கடமையாற்றியுள்ளனர். இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு முன்னாள் அதிபர்களான மர்ஹூம் அபுசாலி, நாகூர்தம்பி, அல்ஹாஜ் சாலிஹ், ஏ.சி.எம்.கபூர், அப்துல் ரசாக், எம்.ஐ.அப்துல் கபூர், யு.எல்.சைனுடீன் மற்றும் தற்போதைய அதிபர் திருமதி பரீதா நிப்றாஸ் இதுவரையில் இப்பாடசாலையில் கற்பித்த ஆசிரியர்களும் பாடசாலை வளர்ச்சிக்கு தங்களை முழுமையாக அர்ப்பணித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த 60 வருட காலத்தில் பல்வேறு ஏற்ற இறக்கங்களுக்கும் சவால்களுக்கும் மத்தியிலேயே இப் பாடசாலை வளர்ந்து வந்துள்ளது. இப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்களினதும் எண்ணற்ற உள்ளூர் மாணவர்களினதும் சமூகத்தினதும் ஒளிவிளக்காக இப்பாடசாலை திகழ்கின்ற இந்நேரத்தில், அக்கரைப்பற்று பட்டியடிப்பிட்டி அர் - றஹீமியா வித்தியாலயத்தின் வைரவிழாக் கொண்டாட்டத்தில் பாடசாலை சமூகத்தினரும் ஊரவர்களும் பழைய மாணவர்களும் பெருமகிழ்ச்சி கொள்கின்றனர்.

# திருத்தியமைக்கப்பட்ட தளபாடங்கள் கையளிப்பு



கிண்ணியா செய்தியாளர்

திருகோணமலை மாவட்டத்தில் இருபது இலட்சம் ரூபா செலவில் புல்மோட்டை பிரதேச பாடசாலைகளில் தளபாடங்கள் திருத்தியமைக்கப் பட்டு பாடசாலை நிர்வாகிகளிடம் புதன்கிழமை (28) மீள வழங்கப்பட்டன.

சர்வதேச மனிதநேய அமைப்பான முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் முன்மாதிரிக் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாடசாலைக் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் புல்மோட்டை சதாம் முஸ்லிம் வித்தியாலயம், அரபாத் முஸ்லிம் வித்தியாலயம், சலாமியா முஸ்லிம் வித்தியாலயம் மற்றும் ஜின்னாபுரம் கலவன் பாடசாலைகளுக்கு சுமார் இரண்டு மில்லியன் செலவில் 472 கதிரைகள் மற்றும் 250 மேசைகள் திருத்தி அமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் மீண்டும் ஒப்படைக்கப்பட்டன.

மேற்படி பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்கள் மிகவும் வறிய - பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்தவர்களாகும். சுமார் 13 வருடங்கள் மேற்படி பாடசாலை மாணவர்கள் போதிய தளபாட வசதிகளின்றி கல்வி கற்று வந்தனர்.

பாடசாலைகளின் அதிபர்களின் தலைமையில் முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் திட்ட ஒருங்கிணைப் பாளர் எம்.ஏ.எம்.அஸ்வர் மற்றும் முஸ்லிம் எயிட் நிறுவன உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், மாணவர்கள், புல்மோட்டை 04 முன்மாதிரி கிராம அபிவிருத்திக் குழுவின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது



காத்தான்குடி மேலதிக செய்தியாளர்

நாடு முழுவதிலும் குற்றச் செயல்களை ஒழிக்கும் நோக்குடன் பொலிஸ் மா அதிபரின் விசேட உத்தரவின் பேரில் பொலிஸாரினால் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இந்நிலையில், ஒரு தொகை ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் புதன்கிழமை(28) கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எம்.எஸ்.ஏ.றஹீம் தெரிவித்தார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி பிரதான வீதியில் வாகன உதிரிப்பாக வர்த்தக நிலையமொன்றில் வைத்து விற்பனைக்காக சிறிய பொதிசெய்யப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் பொலிஸார் குறித்த சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 6ஆயிரத்து 920 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் போதைப்பொருளை பாவிக்கும் கருவியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர் ஒல்லிக்குளத்தைச் சேர்ந்தவர் எனவும் சந்தேக நபரை மட்டக்களப்பு நீதவான் நீதமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

மட்டக்களப்பு, கல்லடி செய்தியாளர்

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள சாகாமம் பகுதியில் காட்டு யானைத்தாக்குதலுக்குள்ளாகி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

வயலில் காவலுக்கு சென்றிருந்த விவசாயி ஒருவரே வியாழக்கிழமை(29) அதிகாலை உயிரிழந்துள்ளார்.

திருக்கோவில் 2ஆம் பிரிவை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 56வயதுடைய இரத்தினம் புஸ்பராஜா என்பவரே இவ்வாறு காட்டு யானைத் தாக்குதலுக்கு பலியானவராவார்.

குறித்த நபர் தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்து திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டுசெல்லும்வேளை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இதேவேளை, குறித்த பகுதியில் காட்டு யானை நடமாட்டம் அதிகரித்து வருவதுடன் இதுவரை யானைத் தாக்குதலுக்குள்ளாகிய இருவர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விசேட தேவையுடைய விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கி வைப்பு



மட்டக்களப்பு, கல்லடி செய்தியாளர்

மட்டக்களப்பில் விசேட தேவையுடைய விவசாயிகளுக்கு 1.8 மில்லியன் பெறுமதியான விவசாய உபகரணங்கள் உதவி மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன் தலைமையில் மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ மண்டபத்தில் புதன்கிழமை(28) வழங்கப்பட்டது.

சர்வதேச ஹென்டிகெப் நிறுவனத்தின் அனுசரணையில் அவுஸ்ரேலியன் எய்ட் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளையும் சேர்ந்த சுமார் 35 விசேட தேவையுடையோர்களுக்கு தலா 50 ஆயிரம் பெறுமதியான விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் 09ஆம் திகதி ஹென்டிகெப் அமைப்பினால் கால்களை இழந்த விசேட தேவையுடையவர்களுக்கு செயற்கைக் கால் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது விவசாயத்தில் அதிக ஆர்வமுள்ளவர்களும் வீட்டுத் தோட்டத்தை மேற்கொள்பவர்களுமான இவ்விசேட தேவையுடையவர்கள் 14 செயலகப் பிரிவுகளிலுமிருந்து தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இதன்போது அவர்களது விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக விவசாய உள்ளீடுகள், சேதனப் பசளை வகைகள், தெளிகருவிகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், நீர்பாய்ச்சும் குழாய்கள், நீர்த்தாங்கிகள், பாதுகாப்பு வேலிகளுக்கான முற்கம்பிகள் என்பன வழங்கப்பட்டன.

இதுதவிர, இவ்விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் விசேட தேவையுடையவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் செயற்கைக்கால்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் விவசாய விரிவாக்கல் திணைக்கள பிராந்திய பிரதிப் பணிப்பாளர் வீ.பேரின்பராஜா, ஹென்டிகெப் நிறுவனத்தின் நிதிமுகாமையாளர் சாரங்க, ஹென்டிகெப் நிறுவனத்தின் உத்தியோகத்தர் எஸ்.கோசல, மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி எஸ்.கோணேஸ்வரன், கிழக்கு மாகாண சமூக சேவைத்திணைக்கள மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர்களான ஏ.எம்.அலியார், எஸ்.அருள்மொழி உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் பயனாளிகள் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

# ஒஸ்கார் தெரிவுக்குழுவில் இயக்குநர் மணிரத்னம்



ஒஸ்கார் விருது வழங்கும் தெரிவுக்குழுவில் இயக்குநர் மணிரத்னம் இடம்பெற்றுள்ளார்.

அடுத்த ஆண்டு ஒஸ்கார் விருதுகள் வழங்கும் தெரிவுக்குழுவுக்காக பல்வேறு நாடுகளிலிருந்து 398 உறுப்பினர்கள் புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து இயக்குநர் மணிரத்னம், ''நாட்டு நாட்டு..'' பாடல் புகழ் இசையமைப்பாளர் கீரவாணி, அதன் பாடலாசிரியர் சந்திரபோஸ், நடிகர்கள் ராம் சரண், ஜூனியர் என்.டி.ஆர்., பொலிவூட் தயாரிப்பாளர் கரண் ஜோஹர் ஆகியோர் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே தமிழகத்திலிருந்து இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானும் நடிகர் சூர்யாவும் அந்தக் குழுவில் உறுப்பினர்களாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய சட்டத்தால் தென்கொரியாவில் அனைவருக்கும் வயது குறைந்தது




தென் கொரியா இயற்றியுள்ள புதிய சட்டத்தால் வயதை கணக்கிடும் பாரம்பரிய முறைகள் கைவிடப்பட்டு சர்வதேச நடைமுறை அமுலுக்கு வருகிறது. இந்த அறிவிப்பு தென் கொரியர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

தென் கொரியாவில் வயதின் கணக்கீடு என்பது பிற நாடுகளிலிருந்து வேறுபடுகிறது. அவர்கள் வயதை கணக்கிட 2 முறையை பின்பற்றுகிறார்கள். அதாவது ஓர் குழந்தை பிறக்கும் போதே அது ஒரு வயதுடன் பிறப்பதாக அவர்கள் நிர்ணயிக்கின்றனர். அதாவது தாயின் கர்ப்பப்பையில் இருக்கும்போதே குழந்தையின் வயது எண்ணிக்கை தொடங்குகிறது.

இரண்டாவது முறை அந்நாட்டில் பிறந்த நாள் திகதியில் தான் ஒருவரின் வயது கூடுதல் பெறுகிறது என்றில்லை. ஜனவரி முதலாம் திகதியை அவர்கள் கடக்கும் போதே அவர்களுக்கு ஒரு வயது கூடி விடுகிறது. வயது கூடுவதில் பிறந்த திகதி கணக்கில் கொள்ளப்படாது.

இந்நிலையில் இந்த முறைகளை நீக்கி தற்போது சர்வதேச அளவிலான வயது கணக்கீட்டு முறையை தென்கொரியா ஏற்றுக் கொண்டுள்ளது. தென் கொரியா பின்பற்றிய இந்த முறையால் ஒருவகையில் கொரியர்களுக்கு பொருளாதாரம், வேலை வாய்ப்பு சார்ந்த இழப்பீடுகளும் குழப்பங்களும் ஏற்படுவதாக அரசியல் கட்சிகள் தொடர்ந்து விமர்சனங்கள் எழுப்பி வந்தன. இந்நிலையில் யூன் சுக் யோல்ட் தலைமையிலான அரசு இந்த மாற்றத்தை கொண்டுள்ளது.

அதன்படி, இனி பிறந்த நாள் அன்றே அனைவருக்கும் வயது அதிகரிக்கும். சுமார் 70 சதவீத தென்கொரிய மக்கள் இந்த புதிய மாற்றத்தை வரவேற்றுள்ளனர்.

# மாயமான டைட்டன் நீர்மூழ்கியின் சிதைந்த பாகங்கள் கண்டுபிடிப்பு

## சுற்றுலாச்சென்ற ஐவரின் மனித உடல் எச்சங்கள் ஒட்டியிருப்பதாக தகவல்







டைட்டானிக் கப்பலை பார்வையிட சுற்றுலா பயணிகள் சென்று மாயமான டைட்டன் நீர்மூழ்கி கப்பலின் சிதைந்த பாகங்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், அதில் நீர்மூழ்கியில் பயணித்த ஐவரின் உடல் எச்சங்கள் காணப்படுவதாக அமெரிக்க கடலோர காவல்படை தகவல் தெரிவித்துள்ளது.

வடக்கு அட்லான்டிக் பெருங்கடலில் டைட்டானிக் கப்பலின் சிதைந்த பாகங்களை சுற்றிக் காண்பிக்க சுற்றுலா பயணிகளுடன் சென்ற ஓஷன்கேட் எக்ஸ்பெடிஷன்ஸ் என்ற அமெரிக்க தனியார் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட டைட்டன் நீர்மூழ்கிக் கப்பல் கடந்த 18ஆம் திகதி புறப்பட்டது.

துரதிர்ஷ்டவசமாக புறப்பட்ட 1.45 மணி நேரத்தில் அந்த நீர்மூழ்கிக் கப்பல் அழுத்தம் காரணமாக வெடித்துச் சிதறியது. இந்த விபத்தில், டைட்டானிக் கப்பலைப் பார்வையிடுவதற்காக நீர்மூழ்கியில் சென்ற பாகிஸ்தான் தொழிலதிபர் ஷேசாதா தாவூத், அவரது மகன் சுலைமான் தாவூத், ஓஷன்கேட் நிறுவனத்தின் நிறுவனர் ஸ்டாக்டன் ரஷ், பிரித்தானிய தொழிலதிபர் ஹமீஷ் ஹார்டிங் மற்றும் பிரான்ஸ் கடற்படை முன்னாள் கொமாண்டோ போல்-ஹென்றி நார்கியோலே ஆகிய ஐவரும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் போல்-ஹென்றி, டைட்டானிக் நிறுவனம் சார்பில் செயற்பட்டு, மூழ்கியுள்ள டைட்டானிக் கப்பலிலிருந்து சுமார் 5,000 பொக்கிஷங்களை மீட்க உதவியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அமெரிக்க மற்றும் கனடா நாட்டு கடலோர காவல்படையினர் கப்பல்கள், ஹெலிகொப்டர் மூலம் தேடுதல் வேட்டையில் இறங்கிய நிலையில் சுமார் 10 நாட்கள் தேடுதல் வேட்டையில், நேற்றுமுன்தினம் 28ஆம் திகதி டைட்டன் நீர்மூழ்கிக் கப்பலின் உடைந்த பாகங்கள் பல மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட அந்த சிதைந்த பாகங்களில் மனித உடல்களின் சில எச்சங்கள் ஒட்டிக் கொண்டிருப்பதும் தெரியவந்துள்ளது.

டைட்டன் நீர்மூழ்கி சுற்றுலா வாகனத்தின் சிதிலமடைந்த பகுதிகள் கடலில் 12,000 அடி ஆழத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட சிதைந்த பாகங்களை அமெரிக்கா மற்றும் கனடாவை சேர்ந்த அதிகாரிகள் ஆய்வு செய்யவுள்ளனர். அதன் முடிவில் டைட்டன் நீர்மூழ்கி கப்பல் விபத்துக்கான காரணம் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் நீர்மூழ்கிக் கப்பல் ஏன் வெடித்தது என்பதற்கான விசாரணையின் முக்கிய பகுதியாகும் என தெரிவித்தது.

உலக செய்திகள்

# வங்கக்கடலில் சூறாவளி: மீனவர்களுக்கு தடை

வங்கக்கடலில் சூறாவளி காற்று வீசுவதால், எதிர்வரும் ஜூலை 2ஆம் திகதிவரை மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, வங்கக் கடலில், தென் தமிழக கடலோரம், மன்னார் வளைகுடா, குமரி கடல் மற்றும் இலங்கை கடலோரப் பகுதிகளில், மணிக்கு 55 கிலோமீற்றர் வேகத்தில் சூறாவளி காற்று வீசுகிறது. எனவே, எதிர்வரும் 2ஆம் திகதிவரை மீனவர்கள், மேற்கண்ட கடல் பகுதிக்குள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# 17 வயது ஆபிரிக்க வம்சாவளி சிறுவனை சுட்டுக்கொன்ற பொலிஸ்

## பற்றி எரியும் பாரிஸ் நகரம்



பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் வாகன தணிக்கையின்போது காரை நிறுத்தாமல் சென்ற 17 வயதான ஆபிரிக்க வம்சாவளி சிறுவனை பொலிஸார் சுட்டுக் கொன்ற நிலையில், அந்நகரம் முழுவதும் பொலிஸாருக்கு எதிரான போராட்டங்கள் நடத்தப்பட்டன. பேராட்டத்தின்போது பாடசாலைகள் மற்றும் பொலிஸ் நிலையங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டும், உடைமைகள் அடித்து நெருக்கப்பட்டுள்ளன. வன்முறை சம்பவத்தில் 24 பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்துள்ளனர். 40 கார்கள் தீக்கிரையாகியுள்ளன.

வன்முறையாக வெடித்ததைத் தொடர்ந்து இரண்டாவது நாளாகவும் நேற்று பாரிஸ் நகரின் பல பகுதிகளில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன. அமைதியை நிலைநாட்டும் பொருட்டு சுமார் 40ஆயிரம் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். ஆபிரிக்க சிறுவன் பொலிஸாரால் சுட்டுகொலை செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராடிய 150 பேர் கைது செய்யப்பட்டனர்.

மேலும் சிறுவன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்துள்ள பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரொன், “இது மன்னிக்கமுடியாத குற்றம். சட்டம் தனது கடமையைச் செய்யத் தொடங்கிவிட்டதால் மக்கள் அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.



# உலக இளையோர் வில்வித்தை: இலங்கையர் இருவர் பங்கேற்பு



அயர்லாந்தில் ஜூலை 1 முதல் 9 வரை நடைபெறவுள்ள உலக வில் வித்தை இளையோர் சம்பியன்ஷிப் போட்டியில், கொழும்பு ஆனந்தா கல்லூரியின் திசல் தின்சாராவும் கல்கிசை எஸ்.தோமஸ் கல்லூரியின் லகிந்து குணரத்னாவும் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்த தகுதி பெற்றனர்.

இலங்கை வில்வித்தை சங்கம் (SLAA) 18 மற்றும் 20 வயதுக்குட் பட்ட வயதுப் பிரிவுகளில் ஆறு சிறுவர்கள் மற்றும் ஆறு பெண்கள் உட்பட பலர் இளம் வில்வீரர்களை இலங்கையைப் பிரதிநிதித்து வப்படுத்துவதற்கு போட்டியிட்டனர்.

ஆனால் தின்சரா மற்றும் குணரத்னா ஆகியோர் தகுதி புள்ளிகளைப் பெற்றனர். ஆண்களுக்கு 570 மதிப்பெண்களும் பெண்களுக்கு 550 மதிப்பெண்களும் நிர்ணயிக்கப்பட்டன.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

ஐ.சி.சி. உலகக்கிண்ண தகுதிகாண் தொடர் - 2023

# சுப்பர் சிக்ஸ் சுற்றில் இன்று நெதர்லாந்தை சந்திக்கும் இலங்கை

ஏ. அகீல் சிஹாப்




ஐ.சி.சி. உலகக்கிண்ண தகுதிகாண் தொடரின் சுப்பர் சிக்ஸ் சுற்று நேற்று ஆரம்பமானது. எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ள 13ஆவது ஐ.சி.சி. உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கான இரு அணிகளை தெரிவுசெய்யும் தகுதிகாண் தொடர் கடந்த 18ஆம் திகதி முதல் சிம்பாப்வேயில் நடைபெற்று வருகிறது.

முதலில் 10 அணிகள் பங்கேற்ற லீக் சுற்றின் அடிப்படையில் குழு ஏ யிலிருந்து சிம்பாப்வே, நெதர்லாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள், குழு பி யிலிருந்து இலங்கை, ஸ்கொட்லாந்து மற்றும் ஓமான் அணிகள் சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு தகுதிபெற்றன. இதில் லீக் போட்டிகளில் இருந்து சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு தகுதிபெற்ற இரு அணிகளுடன் பெற்ற வெற்றி சுப்பர் சிக்ஸ் சுற்றின் புள்ளிப்பட்டியலில் இடம்பெற்றுள்ளது. அந்த வகையில் இலங்கை அணி சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு குழு ஏ யிலிருந்து தெரிவான நெதர்லாந்து, சிம்பாப்வே மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது.

அனைத்து போட்டிகளின் முடிவில் புள்ளிப்பட்டியலில் முதலிரு இடங்களை பெறும் இரு அணிகள் ஐ.சி.சி. உலகக்கிண்ண தொடருக்கு தகுதிபெறும். இதில் இலங்கை அணி சுப்பர் சிக்ஸ் சுற்றை 04 புள்ளிகளுடன் ஆரம்பிக்கிறது. அந்த வகையில், இலங்கை அணி தங்களது முதல் ஆட்டத்தில் இன்று நெதர்லாந்து அணியை எதிர்கொள்கிறது. இந்த ஆட்டம் புலவாயோ நகரில் இலங்கை நேரப்படி பகல் 12.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

# 3 மணிநேரத்தில் 36 இலட்சம் பேர்



சி.எஸ்.கே. அணியின் கெப்டனும் நட்சத்திர வீரருமான மகேந்திர சிங் டோனி கேன்டி கிரஷ் கேம் விளையாடும் வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. சர்வதேச போட்டிகளில் இருந்து டோனி ஓய்வு பெற்று, ஐ.பி.எல். தொடரில் மட்டும் விளையாடி வந்தாலும் அவருக்கான மவுசும் ரசிகர்கள் பட்டாளமும் சற்றும் குறைந்தபாடில்லை.

அவரது சிறு சிறு நகர்வுகள் குறித்த தகவல்கள் வெளிவந்தாலும் ரசிகர்கள் அதை ஆர்வத்துடன் பார்த்து டிரெண்ட் செய்து வருகின்றனர். இந்நிலையில், அது போன்ற வீடியோ ஒன்று தற்போது சமூக வலைதளங்களில் ஹிட்டடித்து வருகிறது.

விமானத்தில் டோனி பயணம் செய்கிறார். அவருக்காக தட்டு நிறைய சொக்லேட், பிஸ்கட்களை எடுத்துக் கொண்டு விமான பணிப்பெண், டோனி அமர்ந்திருக்கும் இருக்கைக்கு சென்று அவரிடம் எடுத்துக் கொள்ளுமாறு தட்டை நீட்டுகிறார். அதற்கு டோனி கொடுத்த ரியாக்ஷன் இவ்வளவு சொக்லேட்டுகளா என்று கேட்பதுபோல் இருந்தது.

தனது டேப்பில் கேண்டி க்ரஷ் கேமை டோனி விளையாடிக் கொண்டிருந்த நிலையில், தட்டில் இருந்த சொக்லேட், பிஸ்கட்டுகளில் ஒன்றே ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டார். இது மட்டும் தனக்கு போதும் என்று சொன்ன டோனி, அந்த தட்டை அப்படியே விமான பணிப் பெண்ணிடம் கொடுத்தார்.

டோனி கேண்டி கிரஷ் கேம் விளையாடும் இந்த வீடியோ இணையத்தில் வைரலான நிலையில், அதை ரசிகர்கள் ஆர்வத்துடன் பகிர்ந்தது மட்டுமல்லாது, இந்த கேண்டி கிரஷ் கேமை டவுன்லோட் செய்து விளையாடி வருவதாகவும் கூறப்படுகிறது. இந்த வீடியோ வெளியான உடன் கேண்டி கிரஷ் விளையாட்டுக்கு மவுசு கூடி பலரும் டவுன்லோட் செய்த நிலையில், 3 மணிநேரத்தில் 36 இலட்சம் பேர் டவுன்லோட் செய்துள்ளதாக இணையத்தில் Candy Crush Saga Official என்ற ட்விட்டர் கணக்கு ட்வீட் செய்தது.

# 80,000 ரிக்கெட்களும் விற்று முடிந்துவிட்டன




அவுஸ்திரேலியாவில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் மகளிர் உலகக் கிண்ண தொடக்கப் போட்டியின் 80,000 ரிக்கெட்களும் விற்பனையாகிவிட்டதாக பீபாவின் மூத்த அதிகாரி டேவ் பீச் செவ்வாயன்று தெரிவித்தார்.

பெண்கள் உலகக் கிண்ணத் தலைமை நிர்வாகி டேவ் பீச் கூறுகையில், ஜூலை 20ஆம் திகதி நடைபெறும் அவுஸ்திரேலியா - அயர்லாந்து ஆகியவற்றுக்கிடையிலான போட்டி அவுஸ்திரேலியாவின் சிட்னி ஸ்டேடியத்தில் நடைபெறவுள்ளது. 80,000 ரசிகர்கள் அமரக்கூடிய மைதானத்தின் அனைத்து ரிக்கெட்களும் விற்பனையாகிவிட்டன. இது சுமார் 80,000 ரசிகர்களைக் கொண்டுள்ளது. .

அதே நாளில் ஆக்லாந்தில், நியூசிலாந்து, நோர்வே ஆகியவற்றுக்கிடையில் நடைபெறவுள்ளது. ஈடன் பார்க்கில் நியூசிலாந்தின் தொடக்க ஆட்டத்துக்கு ‘சில ஆயிரம்' டிக்கெட்டுகள் மட்டுமே எஞ்சியுள்ளன.

நியூசிலாந்தில் போட்டியின் குறைந்த டிக்கெட் விற்பனை குறித்த அச்சம் இருந்தபோதிலும், தொடக்க ஆட்டத்தில் ஆக்லாந்து மைதானம் விற்றுத் தீர்ந்துவிடுமா என்று கேட்டதற்கு ‘ஆம், நிச்சயமாக' என்று பீச் பதிலளித்தார்.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்தில் நடக்கும் 64 போட்டிகளுக்கு சுமார் 1.1 மில்லியன் டிக்கெட்டுகள் விற்பனையாகியுள்ளதாக பீபா உதைபந்தாட்ட நிர்வாகக்குழு தெரிவித்துள்ளது.

பீபாவின் மகளிர் கால்பந்தாட்டத் தலைவி சாராய் பேரேமன், நியூசிலாந்தில் உலகக் கோப்பை டிக்கெட் விற்பனை குறைவாக இருப்பது குறித்து கவலை தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்தில் இதுவரை 270,000 டிக்கெட்டுகளும் அவுஸ்திரேலியாவில் 830,000 டிக்கெட்டுகளும் விற்கப்பட்டுள்ளதாக பீச் கூறினார்.

அந்த சமமற்ற எண்கள் 26 மில்லியன் மக்கள் வாழும் அவுஸ்திரேலியா மற்றும் ஐந்து மில்லியன் மக்கள் வசிக்கும் நியூசிலாந்தின் மக்கள்தொகை அளவைப் பிரதிபலிக்கின்றன என்று அவர் தெரிவித்தார்.

‘மாடில்டாஸ் ஒரு உயர் தரவரிசை அணியாகவும் கால்பந்து ஃபெர்ன்களின் ஃபார்மிலும் பார்க்கும்போது, நியூசிலாந்து நன்றாகச் செயல்படுகிறது' என்று அவர் கூறினார்.

# காலநிலை மாற்ற எதிர்ப்பாளர்கள் கைது



அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகியவற்றுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின்போது இடையூறு செய்த காலநிலை எதிர்ப்பு ஆதரவாளர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர்.

கிராண்ட் ஸ்டாண்டில் இருந்து எதிர்ப்பாளர்கள் வெளிப்பட்டபோது, வீரர்கள் இரண்டாவது ஓவருக்கு தயாராகிக்கொண்டிருந்தனர். ஒருவர், 69 வயதான பாட்டி, விளையாட்டு மைதானத்துக்கு வரவில்லை, ஆனால் மேலும் இருவர் ஆரஞ்சு தூள் பெயிண்ட் பைகளை எடுத்துக்கொண்டு வெவ்வேறு ஸ்டம்புகளை நோக்கி விரைந்தனர். இங்கிலாந்தின் விக்கெட் கீப்பரான பேர்ஸ்டோ, ஒருவரை இடைமறிக்க விரைவாக நகர்ந்தார். மறுமுனையில் இங்கிலாந்து கெப்டன் பென் ஸ்டோக்ஸ் மற்றும் அவுஸ்திரேலியாவின் டேவிட் வார்னர் ஆகியோர் இணைந்து ஊடுருவும் நபரை சதுக்கத்தில் இருந்து வெளியேற்றினர்.

பார்வையாளர்களின் கூச்சலுக்கு, எதிர்ப்பாளர்களில் இருவர் பணிப்பெண்களால் மைதானத்துக்கு வெளியே அழைத்துச் செல்லப்பட்டனர். மூன்றாவது நபர் பேர்ஸ்டோவால் கொண்டு செல்லப்பட்டவர். ஒத்துழைக்க மறுத்து, இறுதியில் இரண்டு பொலிஸ் அதிகாரிகளால் தரையில் இருந்து தூக்கிச் செல்லப்பட்டார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7